**தலைப்பு 306 - இலங்கை புகையிரதத் திணைக்களம்**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

தலைப்பு 306 - இலங்கை புகையிரதத் திணைக்களத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் இலங்கை புகையிரதத் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2023 மே 24 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் திணைக்களத்திற்குரிய விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2023 மே 31 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இலங்கை புகையிரதத் திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புக்கள்**

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய

வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் திணைக்களத்தால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு திணைக்களத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்களுடன் நேரொத்ததாக உள்ளது எனவும்,

(ஆ) முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் வழங்கப்பட்ட பின்வரும் பரிந்துரைகள் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

| **முன்னைய ஆண்டிற்குரிய அறிக்கையின் பந்தியின் தொடர்பு** | | **அமுல்படுத்தப்படாதிருந்த பரிந்துரைகள்** | **இந்த அறிக்கையின் பந்தியின் தொடர்பு** |
|---|---|---|---|
| 1.6.3(ஆ) | (i) | 2021 ஆம் ஆண்டின் நிதிச் செயலாற்றல் கூற்றின் பிரகாரம் மூலதன சொத்துக்கள் கைப்பற்றல் ரூபா 23,262,468,064 ஆக இருந்ததுடன், நிதி அல்லா சொத்துக்கள் தொடர்பான கூற்றில் (ACA-6) மற்றும் திறைசேரி அச்சிடல் SA 82 இன் பிரகாரம் கொள்வனவு பெறுமதி ரூபா 1,371,353,774 ஆக இருந்தது. அதன் பிரகாரம் வேறுபாடு ரூபா 21,891,114,290 ஆகும். | 1.5.1(ஈ)(i) |
| | (ii) | 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதியல்லா சொத்துக்களின் பெறுமதி ரூபா 245,322,655,012 ஆக இருந்த போதிலும், நிதியல்லா சொத்துக்கள் கூற்றின் ஆரம்ப மீதியாக ரூபா 480,429,150,059 காண்பிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் வேறுபாடு ரூபா 235,106,497,047 ஆகும். | 1.5.1(ஈ)(ii) |
| | (iii) | மீளாய்வாண்டின் ஆரம்ப மீதியில் முன்னைய ஆண்டின் இறுதி மீதியுடன் இணக்கம் செய்யும் போது வேறுபாடு காணப்படுமாயின் அந்த வேறுபாடு தொடர்பாக நிதிக் கூற்றுக்களில் | 1.5.1(ஈ)(iii) |

| | | | |
|---|---|---|---|
| | | அறிக்கையிடல் அடிப்படையின் கீழ் குறிப்புகளின் மூலம் வெளிப்படுத்த வேண்டியிருந்த போதிலும், அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை. | |
| 1.6.3(உ) | (i) | 2021 புகையிரத திணைக்களத்தின் களஞ்சிய முற்பண கணக்கிற்காக அங்கீகரிக்கப்பட்ட கணக்கீட்டு கொள்கை வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. அதனால் இந்த கணக்கு பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டு மூலத் தத்துவங்கள் அல்லது பொது துறை கணக்கீட்டு மூலத் தத்துவங்களுக்கு இணங்க தயாரிக்கப்பட்டதா என கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்படவில்லை. | 1.5.1(உ)(i) |
| | (ii) | கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட முற்பண கணக்கு தயாரிக்கும் நோக்கம் மற்றும் அதன் விடயப்பரப்பு கணக்கின் மூலம் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | 1.5.1(உ)(ii) |
| | (iii) | களஞ்சிய முற்பண கணக்கின் ஆரம்ப மற்றும் இறுதி மீதிகள் திணைக்கள புத்தகங்களின் பிரகாரம் மற்றும் திறைசேரி அச்சிடல் குறிப்புக்களின் பிரகாரம் சமமாக இல்லாமையின் காரணமாக ரூபா 403,366,221 ஆன அந்த வேறுபாடுகள் மிகை மதிப்பீடாக காண்பிக்கப்பட்டிருந்தது. | 1.5.1(உ)(iii) |
| 1.6.3(ஊ) | (i) | திணைக்கள புத்தகங்களின் பிரகாரம் கட்டுப்பாட்டு கணக்கின் ஆரம்ப மீதி ரூபா 1,269,564,455 ஆக இருந்ததுடன், அது திறைசேரி அச்சிடல் குறிப்பின் பிரகாரம் ரூபா 1,273,742,260 ஆகும். அதன் பிரகாரம் திணைக்கள புத்தகங்கள் மற்றும் திறைசேரி புத்தகங்களுக்கு இடையே ரூபா 4,177,805 வேறுபாடு காணப்பட்டது. 2004 ஆம் ஆண்டு முதல் இது வரையில் 17 வருடங்கள் கடந்திருந்த போதும் இந்த மீதியினை தீர்த்து வைப்பதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 1.5.1(ஊ)(i) |
| | (ii) | தனிப்பட்ட மீதி வகைப்படுத்தல் பொழிப்பு மற்றும் திணைக்கள கட்டுப்பாட்டு கணக்குகளுக்கு இடையே காணப்படுகின்ற ரூபா 1,620,898 ஆன வேறுபாட்டில் இனங்காணப்படாத ரூபா 716,977 மீதி காணப்பபட்டது. | 1.5.1(ஊ)(ii) |
| | (iii) | தற்போது சேவையில் இல்லாத உத்தியோகத்தர்களிடம் இருந்து அறவிடுவதற்கு ரூபா 108,685,041.44 மீதி காணப்பட்டது. | 1.5.1(ஊ)(v) |

| | | | |
|---|---|---|---|
| 1.6.4 | (i) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு களஞ்சிய முற்பண கணக்கில் காண்பிக்கப்பட்ட ரூபா 268,627,824 ஆன 05 கணக்கு விடயங்களுக்குரிய காலப் பகுப்பாய்வு மற்றும் தயாரிக்கப்பட்ட முறையை காண்பிக்கின்ற பட்டோலைகள் சமர்ப்பிக்காமையின் காரணமாக அவற்றை திருப்திகாரமாக சான்றுதிப்படுத்தவோ அல்லாது மெய்மெய்யாய்வு செய்யவோ முடியாதிருந்தது. | 1.5.2(அ) |

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

**(அ) நிதி நிலைமைக் கூற்று**

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | நிதி நிலைமைக் கூற்றில் காண்பிக்கப்பட்ட தேறிய சொத்துக்களின் உறுதிப்படுத்துவதற்காக அதில் உள்ளடக்கப்பட்ட மீதி அறிக்கை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாமையால் அந்த பெறுமதியை உறுதிப்படுத்த முடியாதிருந்தது. | கணக்குகளில் வெளிப்படுத்தப்பட்டுள்ள தேறிய சொத்துக்களின் பெறுமதி கணக்கீட்டு ரீதியான எண்ணிக்கையாக மொத்த சொத்துக்களின் எண்ணிக்கையான தயாரிக்கப்பட்டுள்ளதுடன், மொத்த சொத்துக்களின் பெறுமதியில் நடைமுறைப் பொறுப்புக்கள் மற்றும் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் ஒதுக்கப் பெறுமதி நீக்கப்பட்டு கணிப்பிடப்பட்டதாகும். அதன் பிரகாரம் மீதி அறிக்கையாக தனியாக தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | மீதியை உறுதிப்படுத்துவதற்கு உள்ளடக்கப்பட்ட அறிக்கையை தயாரித்து சமர்ப்பித்தல் வேண்டும். |
| (ii) | 2015 திசெம்பர் 31 ஆம் திகதிக்கு முன்னர் காணப்பட்ட புகையிரத பொது முகாமையாளரின் தனிப்பட்ட கணக்கிற்கு உரியதாக பெறவேண்டியதாக குறிப்பிட வேண்டிய ரூபா | 2022 ஆம் ஆண்டின் போது ரூபா 740,148,051 ஆன தொகை ‘‘அறவிடப்பட்டதாக’’ அறிக்கையிடல் அடிப்படையின் கீழ் வெளிப்படுத்தப்படவில்லை. எதிர்காலத்தில் தனியாக | பெறவேண்டிய பணம் நிதி நிலைமைக் கூற்றில் வெளிப்படுத்தப்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| 1,000,515,781 தொகையில் 2022 ஆம் ஆண்டின் போது ரூபா 740,148,051 தொகை அறவிடப்பட்டதாக அறிக்கையிடல் அடிப்படையின் கீழ் வெளிப்படுத்தப்பட்ட போதிலும், மிகுதி பெறவேண்டிய ரூபா 260,367,030 தொகை நிதி நிலைமைக் கூற்றில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்துவதற்கு தேவையான ஆலோசனைகள் பெறப்பட்டுள்ளது. | |

**(ஆ) நிதிசார் செயலாற்றல் மற்றும் காசுப் பாய்ச்சல் கூற்று**

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | நிதிச் செயலாற்றல் கூற்றில் வருமானம் அல்லாத பெறுவனவுகளின் கீழ் ஏனைய பிரதான பேரேட்டு கணக்கில் பெறுவனவாக ரூபா 740,148,051 தொகை காண்பிக்கப்பட்ட போதிலும், அந்த வருமானம் புகையிரத திணைக்களத்திற்கு கிடைத்த முறை கணக்குகளில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | 2022 இன் காசுப் பாய்ச்சல் கூற்றில் இவ்வாறு சீராக்கல் குறிப்புக்கள் 8003 புகையிரத பொது முகாமையாளரின் கணக்கு மற்றும் தொடர்புடைய இரட்டை கணிப்பீட்டு வழுக்களை சரி செய்வதற்காக ஈடுபடுத்தப்பட்டதாகும். அதன் பிரகாரம் இந்த தொகை புகையிரத திணைக்களத்திற்கு உங்களால் குறிப்பிடப்பட்ட முறையில் பெறுவனவு ஒன்றாக 2022 ஆம் ஆண்டில் அறிக்கையிடப்படவில்லை. இந்த சீராக்கங்களின் குறுக்குப் பதிவுகள் காசுப் பாய்ச்சல் கூற்றில் உள்ளடக்குவதற்கான அடிப்படை நிதி கூற்றுக்கள் தயாரிப்பதற்கு பொது திறைசேரியினால் வழங்கப்பட்ட ஆலோசனைக் கோவைகளின் பிரகாரம் சகல குறுக்கு பதிவுகளும் பெறுவனவுகள் மற்றும் கொடுப்பனவுகள் காசுப் | பெறுவனவுகள் கணக்கீடு செய்யும் போது கிடைத்த முறை வெளிப்படுத்தப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | பாய்ச்சல் கூற்றில் காண்பிக்க வேண்டியமை ஆலோசனையின் பிரகாரம் ஆகும். | |
| (ii) | காசுப்பாய்ச்சல் கூற்றில் நிதி செயற்பாடுகளின் கீழ் உருவான காசு பாய்ச்சலின் கீழ் புகையிரத பொது முகாமையாளரின் தனிப்பட்ட கணக்கில் பெறுவனவாக மேற்கூறப்பட்ட ரூபா 740,148,051 தொகை காண்பிக்கப்பட்ட போதிலும், அந்த வருமானம் நிதி செயற்பாடுகளின் மூலம் உருவான வருமானம் என கணக்குகளில் வெளிப்படுத்தப்படவில்லை. | இதன் போது உள்ளபடியாக காசுப் பாய்ச்சல் அல்லாதிருந்ததுடன், இரட்டை கணிப்பீட்டு வழுவை திருத்துவதற்காக பயன்படுத்தப்பட்ட குறுக்குப் பதிவு மாத்திரம் ஆகும். அவ்வாறு இந்த புகையிரத பொது முகாமையாளரின் தனிப்பட்ட கணக்கு திறைசேரி புகையிரத திணைக்களத்துடன் நிதி ரீதியாக தொடர்புபடுகின்றமைக்காக பேணிச் செல்லப்படுகின்ற ஒன்றாக இருந்தமையால் அந்த கணக்கு தொடர்பான சகல கொடுக்கல் வாங்கல்களும் நிதி செயற்பாடுகளின் கீழ் காண்பிக்கப்பட்டுள்ளது. | பெறுவனவுகள் உருவான முறை கணக்குகளில் வெளிப்படுத்தப்படல் வேண்டும். |

**(இ) கட்டுநிதி இணக்கக் கூற்று**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| அரசாங்கத்தின் ஏனைய நிறுவனங்களுக்கு உத்தியோகத்தர்கள் மாற்றலாகி செல்லும் போது கையிளிக்கப்பட்ட கடன் மற்றும் அரசாங்கத்தின் ஏனைய நிறுவனங்களுக்காக அரசாங்க உத்தியோகத்தர்களின் முற்பண கணக்குகளில் இடப்பட்ட வரவு வைத்தல், கட்டு நிதி இணக்கக் கூற்றில் வரவு தலைப்பின் கீழ் தனித்தனியாக வெளிப்படுத்த வேண்டியிருந்த போதிலும், அது ஒன்றிணைந்த பெறுமதியாக காண்பிக்கப்பட்டிருந்தது. | தாமத வழுக்களினால் இது ஏற்பட்டிருந்தது. திணைக்களத்தின் பரீட்சை மீதியின் பிரகாரம் ஏனைய நிறுவனங்களுக்காக அரசாங்க உத்தியோகத்தர்களின் முற்பண கணக்கிற்கு 06 நிறுவனங்களின் கீழ் வரவு வைக்கப்பட்டுள்ளது. அது தொடர்பான விபரம் பின்வருமாறு | கட்டு நிதி இணக்கக் கூற்றின் வரவு தலைப்பின் கீழ் தனித்தனியாக வெளிப்படுத்தப்படல் வேண்டும். |

**தலைப்பு நிறுவனத்தின் தொகை**

| இலக்கம் | பெயர் | (ரூபா) |
|---|---|---|
| 001012 | சனாதிபதி செயலகம் | 15,430.00 |
| 126012 | கல்வி அமைச்சு | 13,200.00 |
| 226012 | குடிவரவு குடிஅகழ்வு திணைக்களம் | 8,750.00 |
| 276012 | பதுளை மாவட்ட செயலகம் | 245,000.00 |
| 331012 | சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம் | 134,136.00 |
| 409012 | வெளிநாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சு | 312,410.40 |
| | மொத்தம் | 728,926.40 |

**(ஈ) நிதியல்லா சொத்துக்கள்**

இது தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் கீழே குறிப்பிடப்படுகின்றது.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | 2022 ஆம் ஆண்டில் நிதி செயலாற்றல் கூற்றின் பிரகாரம் சொத்துக்களை கைப்பற்றுவதற்குரிய மூலதன செலவின விடயத்தின் பிரகாரம் ரூபா 15,285,208,816 ஆன பெறுமதி ஆக இருந்ததுடன், கணக்குகளிலும், திறைசேரி அச்சிடல் குறிப்பு AS 82 இன் பிரகாரம் கொள்வனவுகளின் பெறுமதி ரூபா 2,403,765,858 ஆகும். அதன் பிரகாரம் வேறுபாடு ரூபா 12,881,442,958 ஆகும். | சொத்துக்களை கைப்பற்றுவதற்குரிய மூலதன செலவின விடயத்தின் பிரகாரம் பெறுமதி ரூபா 12,881,442,958 பெறுமதியில் ரூபா 11,608,193,150 பெறுமதியின் கீழ் வெளிநாட்டு கடனின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட சொத்துக்களின் கீழ் காண்பிக்கப்பட்டதுடன், இந்த திணைக்களத்தின் சொத்துக்கள் ஒன்றாக இனங்காணப்படுவது அதற்குரிய சகல செலவினங்களும் செய்யப்பட்டதன் பின்னர் ஆகும். அதன் பிரகாரம் அதற்கு இணங்குவதற்காக இந்த திட்ட முறைமை | சொத்துக்களை கொள்வனவு செய்தல் திறைசேரிக்கு சரியாக அறிக்கையிடப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | சிகாஸ் நிகழ்ச்சித் திட்டத்தில் அமுல்படுத்தப்படுகின்றது. | |
| (ii) | 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதியல்லா சொத்துக்களின் பெறுமதி ரூபா 481,800,503,833 ஆக இருந்த போதிலும், நிதியல்லா சொத்துக்கள் கூற்றில் ஆரம்ப மீதியாக ரூபா 481,859,585,384 காண்பிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் ரூபா 59,081,551 ஆகும். | 2022 இன் கணக்காண்டின் போது மதிப்பீட்டு திணைக்களத்தின் மூலம் வழங்கப்பட்ட காணி மற்றும் கட்டிடங்களின் பெறுமதியான ரூபா 59,081,551.00 பெறுமதி 2022 ஆம் ஆண்டில் நிதியல்லா சொத்துக்களின் ஆரம்ப கணக்கு மீதியாக கணக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன், இந்த பெறுமதி அப்பெறுமதியாகும். | மீளாய்வாண்டின் மீதி முன்னைய ஆண்டின் மீதியுடன் இணக்கம் செய்யும் போது வேறுபாடு காணப்படுமாயின் நிதி கூற்றில் குறிப்புக்களின் மூலம் வெளிப்படுத்துதல் வேண்டும். |

**(உ) களஞ்சிய முற்பண கணக்கு**

இது தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் கீழே குறிப்பிடப்படுகின்றது.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | 2022 இன் புகையிரத திணைக்களத்தின் களஞ்சிய முற்பண கணக்கிற்காக அங்கீகரிக்கப்பட்ட கணக்கீட்டு கொள்கை வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. அதனால் இந்த கணக்கு பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டு மூலக் கருமங்கள் அல்லது பொதுத் துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரிக்கப்பட்டதா என கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | பதிலளிக்கப்படவில்லை. | கணக்கீட்டு கொள்கை வெளிப்படுத்தப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ii) | கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட முற்பண கணக்கு தயாரிக்கும் நோக்கம் மற்றும் அதன் விடயப்பரப்பு கணக்கின் மூலம் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | பதிலளிக்கப்படவில்லை. | நோக்கம் மற்றும் அதன் விடயப்பரப்பு வெளிப்படுத்துதல் வேண்டும். |
| (iii) | களஞ்சிய முற்பண கணக்கின் திணைக்கள புத்தகத்தின் பிரகாரம் மீதி திறைசேரி கணனி அச்சிடலின் பிரகாரம் மீதிக்கு சமமாக இருக்க வேண்டிய போதிலும், அவ்வாறு இல்லாமையின் காரணமாக ரூபா 403,366,221 மிகை மதிப்பீடாக குறிப்பிட்டு திணைக்கள புத்தகங்களின் பிரகாரம் மீதி கழிக்கப்பட்டு திறைசேரி அச்சிடலின் பிரகாரம் மீதிக்கு சமமாக்கப்பட்டிருந்தது. | நீண்ட காலம் முதல் கொண்டுவரப்படுகின்ற பழைய மீதியானமையால் தீர்த்து வைப்பதில் தாமதம் காணப்படுவதை ஏற்றுக் கொள்கின்றோம். அதற்கு காரணம் முன்னர் காண்பிக்கப்பட்ட பிரகாரம் சரியான மூல தகவல்களுக்கு நுழைவதில் வசதியீனம் காணப்பட்டதை குறிப்பிடுகின்றோம். இந்த கணக்குகள் தயாரிக்கும் போது திறைசேரியில் குறிப்பிடப்பட்ட மீதிகளுடன் சீராக்குவதற்கு ஈடுபடுத்தப்பட்டமையும் இதன் மூலம் திறைசேரிக்கு செலுத்த வேண்டிய மீதியில் குறைவொன்று காண்பிக்கப்படாதிருந்ததுடன், திறைசேரியினால் காண்பிக்கப்படுகின்ற மீதியின் பிரகாரம் திணைக்கள புத்தகங்களின் மீதி சரி செய்தல் மாத்திரம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. | மிகை மதிப்பீடாக கணக்கில் காண்பிக்கப்பட்ட மீதியை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (iv) | 1993 ஆம் ஆண்டு முதல் 2022 வரை பொருட்களை இறக்குமதி செய்யும் போது சுங்க கட்டணமாக செலவிடப்பட்ட ரூபா 78,197,076 செலவினம் இருப்பில் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்காமையின் காரணமாக இருப்பு பெறுமதி ரூபா 78,197,076 | கணக்காய்வில் காண்பிக்கப்பட்டுள்ள விடயங்களுடன் இணங்குகின்றோம். பொருட் பெறுவனவு பத்திரம் விநியோகிக்காமையினால் இவ்வாறு கணிசமான பெறுமதி வெளிப்படுத்தப்பட்ட போதிலும், இந்த பெறுமதி மேலே குறிப்பிடப்படுகின்ற பிரகாரம் 2023 ஏப்ரல் மாதம் | சுங்க கட்டண பெறுமதி இருப்பில் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது. | வரை ரூபா 29,653,733 தொகை இருப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளது. எதிர் காலத்தில் பொருட் பெறுவனவு பத்திரத்தை விரைவாக பெற்று இந்த மீதியை இருப்பில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என தயவுடன் அறியத்தருகின்றோம். | |
| (v) | SPL 3060/21 இன் கீழ் சமிஞ்சை உபகரணங்களை பெற்றுக் கொள்வதற்காக சமிஞ்சை உப திணைக்களத்தின் செலவின தலைப்பின் மூலம் செலவிட வேண்டிய ரூபா 22,215,365 தொகை களஞ்சிய முற்பண கணக்கின் ஆண்டின் செலவினமாக காண்பித்தமையின் காரணமாக களஞ்சிய முற்பண கணக்கின் ஆண்டின் வரவு இடல் ரூபா 22,215,365 அதிகரித்து காண்பிக்கப்பட்டிருந்தது. | SPL 3060/21 இன் கீழ் சமிஞ்சை உபகரணங்களை பெற்றுக் கொள்வதற்காக சமிஞ்சை உபகரண திணைக்களத்தின் செலவின தலைப்பின் மூலம் செலவிட வேண்டியிருந்த ரூபா 22,215,365 தொகை ஆண்டின் இறுதியில் செலவின தலைப்பில் போதியளவில் இல்லாமையின் அடிப்படையில் களஞ்சிய முற்பண கணக்கின் கீழ் செலவினம் ஒன்றாக காண்பிக்கப்பட்டிருந்ததுடன், 2023 சனவரி மாதம் இந்த பெறுமதி சமிக்ஞ்சை உப திணைக்களத்தின் செலவின தலைப்பில் வரவு வைத்து சரிசெய்யப்பட்டுள்ளது. | உரிய கொடுப்பனவுகள் மாத்திரம் ஆண்டின் வரவு வைத்தல்களில் உள்ளடக்குதல் வேண்டும். |
| (vi) | 2022 யூலை மாதம் பிரதான இயந்திர பொறியியலாளர் அலவலகத்தின் மூலம் தீர்த்து வைக்கப்பட்ட ரூபா 32,767,012 தொகை களஞ்சிய பட்டியல் பெறுமதி 2022 நவம்பர் மாதம் இரத்துச் செய்யப்பட்டிருந்த போதிலும், அப்பெறுமதி ஆண்டின் பெறுவனவாக கணக்கீடு செய்யப்பட்டதன் | 2022 யூலை மாதம் பிரதான இயந்திர பொறியியலாளர் அலுவலகத்தின் மூலம் தீர்த்து வைக்கப்பட்ட ரூபா 32,767,012 களஞ்சிய பட்டியல் பெறுமதி 2022 நவம்பர் மாதம் உப திணைக்களத்தின் செலவின தலைப்பில் போதியளவில் இல்லாமையின் அடிப்படையில் களஞ்சிய முற்பண கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ளது. மேலும் | உரிய பெறுவனவுகள் மாத்திரம் ஆண்டில் செலவுகளில் உள்ளடக்குதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | காரணமாக ஆண்டின் செலவு வைத்தல் ரூபா 32,767,012 அதிகரித்து காண்பிக்கப்பட்டிருந்தது. | அப்பெறுமதி 2023 சனவரி மாதம் களஞ்சிய முற்பண கணக்கில் செலவு வைக்கப்பட்டுள்ளது. | |

**(ஊ) அரசாங்க உத்தியோகத்தர்களின் "பீ கணக்கு"**

இது தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் கீழே குறிப்பிடப்படுகின்றது.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | 2022 ஆம் ஆண்டின் ஆரம்பத்தின் போது திணைக்கள புத்தகங்களின் பிரகாரம் கட்டுப்பாட்டு கணக்கின் ஆரம்ப மீதி ரூபா 1,118,983,421 ஆக இருந்ததுடன், அது திறைசேரி அச்சிடல் குறிப்பின் பிரகாரம் ரூபா 1,123,161,226 ஆகும். இதன் பிரகாரம் திணைக்கள புத்தகம் மற்றும் திறைசேரி புத்தகங்களுக்கு இடையே ரூபா 4,177,805 வேறுபாடு காணப்பட்டது. 2004 ஆம் ஆண்டு முதல் இது வரையில் 18 வருடங்கள் கடந்திருந்த போதும் இந்த மீதியை தீர்த்து வைப்பத்றகாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2004 ஆம் ஆண்டில் புகையிரத திணைக்களத்தின் அதிகாரத்திற்கு நியமித்ததன் காரணமாக புகையிரத திணைக்களத்தின் கடன் மற்றும் முற்பண கணக்கு மற்றும் தீர்த்து வைத்தல் நடவடிக்கைகள் போக்குவரத்து அமைச்சின் மூலம் மேற்கொள்ளப்பட்டதுடன், மாதாந்த அறிக்கை இறுதி கணக்கு தயாரித்தல் மற்றும் கணக்குகளை இணக்கம் செய்தல், வருடாந்த கணக்குகளை சமா்ப்பித்தல் அமைச்சின் மூலம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. அந்த காலப் பகுதியில் திறைசேரி புத்தகங்கள் மற்றும் திணைக்கள புத்தகங்களுக்கு இடையே ரூபா 4,177,805 வேறுபாடு ஏற்பட்டிருந்தது. 2004 முதல் இது வரை அந்த மீதி தொடர்ச்சியாக பேணிச் செல்லப்படுகின்றது. | வேறுபாட்டிற்கான காரணங்களை பரீட்சித்து தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) | தனிப்பட்ட மீதி வகைப்படுத்தல் பொழிப்பு மற்றும் திணைக்கள கட்டுபாட்டு கணக்குகளுக்கு இடையே | முன்னைய ஆண்டுகளில் ஓய்வு பெற்றுச் சென்ற மற்றும் மரணமடைந்த ஊழியர்களிடம் இருந்து அறவிட வேண்டிய நிலுவை | வேறுபாட்டிற்கான காரணங்களை பரீட்சித்து தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை |

| | | | |
|---|---|---|---|
| | காணப்படுகின்ற ரூபா 836,508 வேறுபாட்டில் இனங்காணப்படாத ரூபா 716,507 மீதி காணப்பட்டது. இந்த மீதிய தீர்த்து வைப்பதற்காக தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கடன் மீதி ஓய்வூதிய பணிப்பாளர் நாயகத்திடம் இருந்து பெற்று அரசாங்க உத்தியோகத்தர்கள் முற்பண கணக்கின் கட்டுப்பாட்டு கணக்கில் செலவு வைக்கப்பட்ட போதும், மீதி பதிவளித்தல் போதியளவான விபரங்கள் ஓய்வூதிய பணிப்பாளர் நாயகத்திடம் இருந்து அல்லது பிரதேச செயலகங்களில் இருந்து கிடைக்காமையின் காரணமாக குறித்துரைத்த ரீதியில் பதிவளிப்பதற்கு முடியாத தனிப்பட்ட மீதி பதிவேடுகளில் தொடர்ந்தும் நிறுத்தி வைக்கப்பட்ட கடன் மீதி ரூபா 716,507 ஆக இருந்தது. அவ்வாறு உறுதிப்படுத்தப்படாத தகவல்களை பெற்றுக் கொள்வதற்கு திணைக்களத்தின் உத்தியோகத்தர்கள் ஓய்வூதிய திணைக்களத்திற்கு சென்று பழைய ஆவணங்களை பரீட்சித்து கண்டறிந்துள்ளனர். | எடுத்தல் வேண்டும். |
| (iii) | சேவை விட்டுச் சென்ற 19 உப திணைக்கள உத்தியோகத்தர்களிடம் இருந்து அறவிட வேண்டிய ரூபா 26,400,397 கடன் மீதியை அறவிடல் தொடர்பாக தாபன விதிக் கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் 4.5 மற்றும் 4.6 ஆம் பந்திகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன், அந்த கடன் மீதியில் 64 சதவீதம் 05 வருடங்களுக்கு மேற்பட்ட | 2022.12.31 இல் உள்ளவாறு சேவையை கைவிட்டுச் சென்ற உத்தியோகத்தர்களிடம் இருந்து அறவிட வேண்டிய கடன் மீதி ரூபா 26,400,397.64 ஆகும். அதில் பிரதான பொறியியலாளர் (இயக்கும் வலு) திணைக்களத்தின் கீழ் மூன்று உத்தியோகத்தர்களிடம் இருந்து ரூபா 603,360.00 தொகை இந்த ஆண்டில் அறவிடப்பட்டுள்ளது. புகையிரத களஞ்சிய அதிகார அத்தியட்சகர் | பழைய கடனை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கடன் மீதியாகும். | அலுவலகத்தின் கீழ் சேவையை விட்டுச் சென்ற இரண்டு உத்தியோகத்தர்களின் ரூபா 494,535.49 கடன் மீதியை அறவிடுவதற்காக அவசர சுற்றிவலைப்பு பிரிவு மற்றும் சட்டப் பிரிவு நடவடிக்கை எடுக்கின்றது. | |
| (iv) | 16 உப திணைக்களங்களில் வேலை நீக்கம் செய்யப்பட்ட உத்தியோகத்தர்களிடம் இருந்து அறவிட வேண்டிய ரூபா 16,251,146 கடன் மீதி மீள அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன், அதில் 68 சதவீதம் ஆன ரூபா 11,195,178 கடன் மீதி 05 வருடங்களை விட அதிகரித்த காலத்தை விஞ்சியிருந்ததுடன், அந்த கடன் மீதியில் 34 சதவீதம் பிரதான பொறியியலாளர் (இயக்கும் வலு) உப திணைக்களத்திற்கு உரிதாகும். | பிரதான பொறியியலாளர் உப திணைக்களத்தின் கீழ் வேலை நீக்கத்திற்கு உட்படுத்தப்பட்ட 05 உத்தியோகர்களை மீண்டும் சேவையில் அமர்த்துவதற்காக மேன்முறையீடு அனுப்பப்பட்டுள்ளது. அதன் போது அந்த உத்தியோகத்தர்களின் கடன் மீதியை தீர்த்து வைக்கும் இயலமை உள்ளது. ஏனைய அறவிடல்களுக்காக கடனாளிகளின் பிணையாளர்கள் தொடர்பான தகவல்கள் அமைச்சரவை பிரிவின் மூலம் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | பழைய கடனை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (v) | அறவிடுவதற்குள்ள மொத்த முற்பண மீதியில் 09 சதவீதத்திற்கு அண்ணளவான தொகை அதாவது ரூபா 102,372,296 தொகை ஊழியர் நியமிக்கப்படாத உத்தியோகத்தராக இருந்ததுடன், அதில் 45 சதவீதத்திற்கு அண்ணளவான தொகை ஓய்வு பெற்றுச் சென்ற உத்தியோகத்தரினை உள்ளடக்கியிருந்து. மேலும் சேவையை கைவிட்டுச் சென்ற, 05 | ஓய்வு பெற்றுச் சென்ற உத்தியோகத்தரின் கடன் மீதியில் அதிக அளவு அண்மைக் காலத்தின போது சேர்ந்த மீதியாக இருந்ததுடன், நாட்டில் காணப்பட்ட நிதி நெருக்கடியின் காரணமாக ஓய்வூதிய பணிக்கொடை செலுத்துதல், ஓய்வு பெற்ற உத்தியோகத்தர்களின் கடன் மீதியை தீர்த்து வைக்கும் நடவடிக்கைகளும் தாமதமடைந்திருந்தன. 2023.04.30 ஆம் திகதி வரையில் ஓய்வுபெற்றுச் | பழைய கடனை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| வருடங்களுக்கு மேற்படட காலம் கடந்திருந்த போதும் முற்பண மீதியை அறவிடுவதற்கு முடியாதிருந்த அளவு ரூபா 16,865,419 ஆகும். இது சேவையை கைவிட்டுச் சென்ற உத்தியோகத்தரிடம் இருந்து அறவிட வேண்டிய மொத்த முற்பணத்தில் 16 சதவீதம் ஆகும். | சென்ற உத்தியோகத்தர்களிடம் இருந்து அறவிட வேண்டிய ரூபா 1,219,285.00 கடன் மீதியொன்று கடந்த 04 மாதங்களில் அறவிடப்பட்டுள்ளது. சேவையில் நியமிக்கப்படாத உத்தியோகத்தர்களிடம் இருந்து அறவிட வேண்டிய கடன் மீதியை பிணையாளர்களிடம் இருந்து அறவிடுவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படுவதுடன், 05 வருடங்களுக்கு மேற்பட்ட காலத்தை விஞ்சிய கடன் மீதி அதிக சதவீதம் 15 வருடங்களுக்கு முன்னர் நிலுவையாக இருந்த மீதியானமையால் தகவல்களை பெற்றுக் கொள்ளுதல் கஷ்டமாக உள்ளது. | |

**(எ) பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணிச் செல்லப்படாமை**

திணைக்களத்தால் கீழே காண்பிக்கப்படுகின்ற சில பதிவேடுகள் பேணிச் செல்லப்படாதிருந்ததுடன், சில பதிவேடுகள் முறையாகவும் நாளதுவரையாகவும் பேணிச் செல்லப்படாதிருந்தமை தெரிவுக் கணக்காய்வு பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்டது.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| **(i) நிலுவை வருமானம் தொடர்பான பதிவேடு** | | |
| நிதிப் பிரமாணம் 454(3) மற்றும் நிதிப் பிரமாணம் 177(4) இன் பிரகாரம் நிலுவை வருமானம் தொடர்பான பதிவேடு பேணிச் செல்லப்பட்டிருக்கவில்லை. | வருமானம் சேகரிக்கப்படுகின்ற மற்றும் அறிக்கையிடப்படுகின்ற பிரிவுகளின் நிலுவை ஆவணங்களை பராமரிப்பதற்காக ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. அதனால் ஒன்றிணைந்த நிலுவை வருமானம் தொடர்பான பதிவேட்டை | நிதிப் பிரமாணம் 454(3) மற்றும் நிதிப் பிரமாணம் 177(4) இன் பிரகாரம் நிலுவை வருமானம் தொடர்பான பதிவேடுகள் பேணிச் செல்லப்படல் |

| | | | |
|---|---|---|---|
| | | பேணிச் செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | வேண்டும். |
| **(ii)** | **பொறுப்புக்கள் தொடர்பான பதிவேடு** | | |
| | நிதிப் பிரமாணம் 214 இன் பிரகாரம் ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனம், போக்குவரத்து அதிகார சபை (கொழும்பு) போக்குவரத்து அத்தியட்சகர் (அநுராதபுரம்) மற்றும் சமிக்ஞ்சை மற்றும் தொலைத்தொடர்பு போன்ற 04 உப திணைக்களங்களின் பொறுப்புக்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த சந்தர்ப்பத்தின் போது இதற்கு பதிலளிப்பதற்காக உரிய திணைக்களத்தில் உறுதிப்படுத்திக் கொள்வதற்கு தேவையாக இருந்தமையால் அதற்காக போதியளவான காலம் காணப்படாதிருந்தமையை தயவுடன் அறியத்தருகின்றோம். | நிதிப் பிரமாணம் 214 இன் பிரகாரம் பொறுப்புக்கள் தினந்தோறும் பரீட்சிக் கூடிய வகையில் பதிவேடுகள் அந்த பொறுப்புக்களின் கீழ் குறிப்பிடப்படல் வேண்டும். |

**(ஏ) கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை**

கீழே குறிப்பிடப்படுகின்ற கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான கணக்காய்வு சான்றுகள் சமர்ப்பிக்கப்படவில்லை.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு களஞ்சிய முற்பண கணக்கில் சமர்ப்பிக்கப்பட்ட ரூபா 935,903,785 ஆன 05 கணக்கு விடயங்களுக்குரிய காலப் பகுப்பாய்வு தயாரிக்கப்பட்ட முறைமை காண்பிக்கின்ற பட்டோலைகள் மற்றும் மீதி உறுதிப்படுத்தல் சமர்ப்பிக்காமையின் காரணமாக அவற்றை திருப்திகரமாக சான்றுதிப்படுத்துவதற்கோ அல்லது மெய்மெய்யாய்வு செய்வறதற்கோ | **நானாவித கடன்பட்டோர்** - களஞ்சிய முற்பண கணக்கில் வைக்க வேண்டிய நிதி தொடர்பாக காலப் பகுப்பாய்வும் தயாரிக்கப்பட்டுள்ளது.<br><br>**முற்பணம் மற்றும் வைப்புக்கள் -** மீதி உறுதிப்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகள் உரிய நிறுவனத்திற்கு கடிதம் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது. | உறுதிப்படுத்துவதற் குரிய எழுத்து மூல சான்றுகள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | முடியாதிருந்தது. | **பொருள் இருப்பு குறைவாக வழங்குதல், 1998 – 2009 தீர்த்து வைக்கப்படாத நாணயக் கடிதம், நானாவித கடன்கொடுத்தோர்** - மிகவும் பழைமை மீதியின் காரணமாக அந்த பதவிகளை இனங்கண்டதன் பின்னர் எதிர் காலத்தின் போது சரியாக சமர்ப்பிப்பதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மூலங்களை கண்டறிவதில் வசதியீனம் மற்றும் பதவி அணியினர் போதியளவில் இல்லாமையின் அடிப்படையில் மேற்கூறப்பட்ட மீதிகளை இனங்காண்பதற்கும் சரியாக சமர்ப்பிப்பதற்கும் கவனத்தில் கொள்ளக் கூடிய காலம் தேவையாக இருந்தது. | |
| (ii) | திணைக்களத்தின் நிலுவை வருமானம் தொடர்பான பதிவேடு பேணிச் செல்லப்படாதிருந்ததுடன், நிலுவை வருமானம் ஒவ்வொரு பிரிவுகளில் இருந்தும் பெறப்படுகின்ற வருமான தகவல்களின் பிரகாரமே கணிப்பீடு செய்யப்படுகின்றது. அதன் பிரகாரம் கணக்கில் எரிபொருள் இருப்புக்களில் கணக்கில் காண்பிக்கப்படுகின்ற எண்ணிக்கையில் சரியான தன்மை தொடர்பாக கணக்காய்வின் போது உறுதிப்படுத்துவதற்கு முடியாதிருந்தது. | புகையிரத வருமான தலைப்பு தொடர்பாக ஒன்றிணைந்த நிலுவை வருமானத்தை கணிப்பீடு செய்யும் போது வழமையாக சில பிரிவுகளில் பெறப்பட்ட தகவல்களை அடிப்படையாக கொள்ளப்படுகின்றது. அந்தந்த பிரிவுகளின் நிலுவை பதிவேட்டை பராமரிப்பதற்காக ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. அதனால் ஒன்றிணைந்த நிலுவை வருமானம் தொடர்பான பதிவேடு பராமரித்தல் மேற்கொள்ளப்படவில்லை. | உறுதிப்படுத்துவதற்குரிய எழுத்து மூல ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 வருமான முகாமைத்துவம்

வருமானம் சேகரித்தல், நிலுவை வருமானம் சேகரித்தல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | **வருமானம்** | | |
| (i) | காலி புகையிரத நிலையத்தில் முதலாவது மாடியில் இரண்டு களஞ்சிய அரைகள் மற்றும் புகையிரத பொது முகாமையாளருக்கு ஒதுக்கப்பட்ட அறைகள் தவிர எஞ்சிய 8 அறைகளும் வாடகைக்கு வழங்குவதன் மூலம் 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளுடன் ஒப்பிடும் போது 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் வருமானம் முறையே ரூபா 552,805 மற்றும் 687,900 இனால் வீழ்ச்சியடைந்திருந்தது. | இந்த சந்தர்ப்பத்தின் போது இதற்கு பதிலளிப்பதற்காக உரிய உபதிணைக்களத்தின் உறுதிப்படுத்தல்களை பெற்றுக்கொள்ளுதல் அவசியமாக இருந்தமையால் அதற்கான கால அளவு போதாதிருந்ததை தயவுடன் அறியத்தருகின்றோம். | வருமானம் வீழ்ச்சியடைவதற்கு காரணத்தை கண்டறிந்து வருமானத்தை அதிகரித்து கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) | வெலிகம புகையிரத நிலையத்தின் கணக்குகளின் பிரகாரம் 1988 முதல் காணப்படுகின்ற ரூபா 189,041 தொகை புகையிரத திணைக்களத்திற்கு கிடைக்க வேண்டிய மீதியாக இருந்ததுடன், 2022 யூன் 09 ஆம் திகதி வரையில் 33 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் கடந்திருந்த போதும் அந்த மீதியை தீர்த்து வைப்பதற் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த சந்தர்ப்பத்தின் போது இதற்கு பதிலளிப்பதற்காக உரிய உபதிணைக்களத்தின் உறுதிப்படுத்தல்களை பெற்றுக்கொள்ளுதல் அவசியமாக இருந்தமையால் அதற்கான கால அளவு போதாதிருந்ததை தயவுடன் அறியத்தருகின்றோம். | நீண்ட காலமாக காணப்படுகின்ற மீதிகளை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (iii) | கண்டியில் இருந்து எல்ல வரை ஓடுகின்ற ODESSEY விஷேட புகையிரதத்தில், மூன்றாவது பந்தியில் 50 இருக்கைகள் காணப்பட்ட போதிலும், இணையவழி ஊடாக ஒதுக்கீடு செய்யும் இயலுமை அதில் 76 சதவீதமே காணப்படுகின்றமையால் அதாவது 38 இருக்கைகள் மாத்திரம் ஆகும். இணையவழி ஆசன ஒதுக்கீட்டின் போது அரசாங்க உத்தியோகத்தர்களின் புகையிரத ஆணைச் சீட்டுக்கு இடங்களை பெற்றுக்கொள்வதற்காக வழங்கப்பட்டுள்ள வசதிகள் இந்த முறைமையில் தாக்கமளித்திருந்ததுடன், அரசாங்கத்தின் புகையிரத ஆணைச் சீட்டு பத்திரம் இந்த புகையிரதங்களுக்காக செல்லுபடியற்றமையினால் 2022 மார்ச் 05 ஆம் திகதி முதல் 2022 மார்ச் 31 ஆம் திகதி வரை நாளொன்றுக்கு 12 ஆசனங்கள் வீதம் 27 நாட்களுக்கு 324 ஆசனங்களுக்காக ரூபா 4,000 வீதம் ரூபா 1,296,000 வருமானம் திணைக்களத்திற்கு இழக்கப்பட்டிருந்தது. சந்தர்ப்பத்தின் போது இதற்கு பதிலளிப்பதற்காக உரிய உப திணைக்களத்தின் உறுதிப்படுத்தலை பெற்றுக் கொள்வதற்கு தேவையான இருந்தமையினால் அதற்காக காலம் போதியளவில் இல்லாதிருந்ததை தயவுடன் அறியத்தருகின்றோம். | இந்த சந்தர்ப்பத்தின் போது இதற்கு பதிலளிப்பதற்காக உரிய உபதிணைக்களத்தின் உறுதிப்படுத்தல்களை பெற்றுக்கொள்ளுதல் அவசியமாக இருந்தமையால் அதற்கான கால அளவு போதாதிருந்ததை தயவுடன் அறியத்தருகின்றோம். | இணையவழி முறைமையில் ஆசனங்கள் ஒதுக்கும் போது ஏற்பட்டிருந்த பிரச்சினைகளை தீர்த்து வைத்து வருமானத்தை அதிகரித்து கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (iv) | பண்டாரவல நிலையான வீதி பரிசோதனை அதிகார பிரதேசம் 2ND Hands Rails மீண்டும் பழுதுபார்ப்பதற்காக பெறப்பட்டமை மிகவும் குறுகியதாக காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது. அதன் பிரகாரம் பழுதுபாத்தலுக்காக ஏதாவது அளவினை வைத்துக் கொண்டு தற்போது பாதுகாப்பற்ற, இடையிடையே குவிக்கப்பட்டுள்ள மேலே குறிப்பிடப்பட்ட Rails தற்கால சந்தையில் இருப்பு விலை எண்ணிக்கையின் படி ஒரு கிலோ கிராம் ரூபா 110 வீதம் விற்பனை செய்யப்படுமாயின் அதற்காக ரூபா 36,370,352 வருமானம் திணைக்களத்திற்கு உழைக்கக் கூடியதாக இருந்தமை அவதானிக்கப்பட்டது. | இந்த சந்தர்ப்பத்தின் போது இதற்கு பதிலளிப்பதற்காக உரிய உபதிணைக்களத்தின் உறுதிப்படுத்தல்களை பெற்றுக்கொள்ளுதல் அவசியமாக இருந்தமையால் அதற்கான கால அளவு போதாதிருந்ததை தயவுடன் அறியத்தருகின்றோம். | வருமானம் உழைக்கப்படுகின்ற வழிகளை கண்டறிந்து அந்த வருமானங்களை திணைக்களத்திற்கு உழைத்து கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (v) | கம்பஹா புகையிரத நிலையத்தில் உள்ள சோயா ஐஸ்கிரீம் விற்பனைச்சாலை, மில்கோ பாற்கூடம், இலைக்கஞ்சி விற்பனைச்சாலை மூலம் பெற வேண்டிய நிலுவை வருமானம் மற்றும் நிலுவை மின்சார கட்டண பெறுமதி ரூபா 1,340,887 அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த சந்தர்ப்பத்தின் போது இதற்கு பதிலளிப்பதற்காக உரிய உபதிணைக்களத்தின் உறுதிப்படுத்தல்களை பெற்றுக்கொள்ளுதல் அவசியமாக இருந்தமையால் அதற்கான கால அளவு போதாதிருந்ததை தயவுடன் அறியத்தருகின்றோம். | நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (vi) | அரசாங்கத்தின் நிறுவனங்களில் இருந்து கிடைக்க வேண்டிய நிலுவை போக்குவரத்து | இந்த சந்தர்ப்பத்தின் போது இதற்கு பதிலளிப்பதற்காக உரிய உபதிணைக்களத்தின் உறுதிப்படுத்தல்களை | நிதிக் கூற்றுக்களில் சரியான பெறுமதி காண்பிக்கப்படல் |

| | | | |
|---|---|---|---|
| | கட்டண பெறுமதி ரூபா 3,323,654 ஆக இருந்த போது நிதிக் கூற்றுக்களில் அது ரூபா 2,514,480 ஆக காண்பிக்கப்பட்டதன் காரணமாக நிலுவை போக்குவரத்து வாடகை பெறுமதி ரூபா 809,174 குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது. | பெற்றுக்கொள்ளுதல் அவசியமாக இருந்தமையால் அதற்கான கால அளவு போதாதிருந்ததை தயவுடன் அறியத்தருகின்றோம். | வேண்டும். |
| (vii) | தனியார் நிறுவனம் ஒன்றில் இருந்து 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிட வேண்டிய நிலுவை போக்குவரத்து கட்டணம் ரூபா 1,276,178 ஆக இருந்த போதும், நிதிக் கூற்றுக்களில் அது ரூபா 455,554 ஆக ரூபா 820,624 குறைத்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | இந்த சந்தர்ப்பத்தின் போது இதற்கு பதிலளிப்பதற்காக உரிய உபதிணைக்களத்தின் உறுதிப்படுத்தல்களை பெற்றுக்கொள்ளுதல் அவசியமாக இருந்தமையால் அதற்கான கால அளவு போதாதிருந்ததை தயவுடன் அறியத்தருகின்றோம். | நிலுவை போக்குவரத்து கட்டணம் சரியாக கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |
| (viii) | தனியார் கம்பனி ஒன்றில் இருந்து 2008 ஆம் ஆண்டு முதல் 2021 ஆம் ஆண்டு வரை அறவிட வேண்டிய நிலுவை போக்குவரத்து கட்டணம் ரூபா 8,026,382 ஆக இருந்த போதும், அப்பெறுமதி நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த சந்தர்ப்பத்தின் போது இதற்கு பதிலளிப்பதற்காக உரிய உபதிணைக்களத்தின் உறுதிப்படுத்தல்களை பெற்றுக்கொள்ளுதல் அவசியமாக இருந்தமையால் அதற்கான கால அளவு போதாதிருந்ததை தயவுடன் அறியத்தருகின்றோம். | நிலுவை போக்குவரத்து கட்டணம் சரியாக கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |
| (ix) | புகையிரத பொருள் போக்குவரத்து செய்தல் தொடர்பாக சிலோன் பெற்றோலியம் ஸ்டோரேச் லிமிடட் நிறுவனத்தில் 2022 ஆம் ஆண்டில் ஏப்ரல் முதல் திசெம்பர் வரை அறவிட வேண்டிய நிலுவை போக்குவரத்து வாடகை வருமானம் ரூபா 466,884,519 ஆகும். எனினும், திணைக்களத்தால் இறுதி | இந்த சந்தர்ப்பத்தின் போது இதற்கு பதிலளிப்பதற்காக உரிய உபதிணைக்களத்தின் உறுதிப்படுத்தல்களை பெற்றுக்கொள்ளுதல் அவசியமாக இருந்தமையால் அதற்கான கால அளவு போதாதிருந்ததை தயவுடன் அறியத்தருகின்றோம். | நிலுவை போக்குவரத்து கட்டணம் சரியாக கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | நிதிக் கூற்றுக்களுக்காக எடுக்கப்பட்ட நிலுவை போக்குவரத்து வாடகை வருமானம் ரூபா 156,988,929 ஆக இருந்ததுடன், அந்த மீதிகளுக்கு இடையே ரூபா 53,998,190 தொகை 2008 ஆம் ஆண்டு முதல் 2021 ஆம் ஆண்டு வரையான பழைய மீதியாகும். அதன் பிரகாரம் புகையிரத திணைக்களத்தால் நிலுவை போக்குவரத்து வாடகை வருமானம் ரூபா 309,895,590 குறைத்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | | |
| (x) | 2005 ஆம் ஆண்டு முதல் 2008 வரையான கால எல்லையில் திணைக்களத்திற்கு வைரோஸி விஷேட புகையிரதம் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட பழுதுபார்த்தல் மற்றும் பராமரிப்பு நடவடிக்கைகள் தொடர்பாக தனியார் கம்பனியில் இருந்து ரூபா 6,119,582 தொகை அறவிட வேண்டியிருந்த போதும் அந்த தொகை கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | இந்த சந்தர்ப்பத்தின் போது இதற்கு பதிலளிப்பதற்காக உரிய உபதிணைக்களத்தின் உறுதிப்படுத்தல்களை பெற்றுக்கொள்ளுதல் அவசியமாக இருந்தமையால் அதற்கான கால அளவு போதாதிருந்ததை தயவுடன் அறியத்தருகின்றோம். | வருமானங்களை சரியாக கணக்கீடு செய்தல் வேண்டும். |
| (xi) | கொழும்பு பொருள் களஞ்சிய தொகுதியில் CI-G பொருள் களஞ்சிய கட்டிடத்தில் இருந்து 2021 மே 06 ஆம் திகதியில் உள்ளவாறு அறவிட வேண்டிய நிலுவை வாடகை வருமானம் ரூபா 393,128 தொகை கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | இந்த சந்தர்ப்பத்தின் போது இதற்கு பதிலளிப்பதற்காக உரிய உபதிணைக்களத்தின் உறுதிப்படுத்தல்களை பெற்றுக்கொள்ளுதல் அவசியமாக இருந்தமையால் அதற்கான கால அளவு போதாதிருந்ததை தயவுடன் அறியத்தருகின்றோம். | வருமானங்களை சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்தல் வேண்டும். |

**(ஆ) புகையிரத ஒதுக்க பிரதேசங்களை வாடகைக்கு வழங்கியமையினால் கிடைக்க வேண்டிய நிலுவை வாடகை வருமானம்.**

| | | |
|---|---|---|
| புகையிரத திணைக்களத்திற்குரிய காணிகளை வாடகைக்கு வழங்குவதன் மூலம் கிடைக்க வேண்டிய ரூபா 79,894,344 நிலுவை வருமானத்தை கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன், நிதிக் கூற்றுக்களிலும் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த சந்தர்ப்பத்தின் போது இதற்கு பதிலளிப்பதற்காக உரிய உபதிணைக்களத்தின் உறுதிப்படுத்தல்களை பெற்றுக்கொள்ளுதல் அவசியமாக இருந்தமையால் அதற்கான கால அளவு போதாதிருந்ததை தயவுடன் அறியத்தருகின்றோம். | வாடகை வருமானங்களை சரியான இனங்கண்டு கணக்கீடு செய்தல் வேண்டும். |

## 2.2 செலவின முகாமைத்துவம்

வருடாந்த பாதீட்டு மதிப்பீடு தயாரித்தல் நிதி ஏற்பாட்டை மாற்றுதல் மற்றும் சேமிப்பு தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| உரிய ஆய்வு மற்றும் திட்டம் இன்றி வருடாந்த மதிப்பீட்டில் நிதி ஏற்பாடு ஒதுக்கப்படாமையின் காரணமாக | | |
| (i) 04 செலவின விடயங்களுக்காக மிகை நிதிஏற்பாடு ஒதுக்கப்பட்டதன் மூலம் ரூபா 1,338,000 மொத்த நிதி ஏற்பாடும் சேமிக்கப்பட்டிருந்ததுடன், 15 செலவின விடயங்களுக்குரிய ரூபா 169,000,000 ஆன மிகை நிதி ஏற்பாடு நிதிப் பிரமானம் 66/69 இன் மூலம் ஏனைய செலவின விடயங்களுக்கு மாற்றப்பட்டிருந்தது. | எதிர்காலத்தின் போது இவ்வாறான நிலைமை இயலுமான வரை குறைத்துக் கொள்வதற்கு சரியாக நிதி முகாமைத்துவத்தை பேணிச் செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என குறிப்பிடுகின்றோம். | சரியான ஆய்வின் அடிப்படையில் போதியளவான பிரகாரம் நிதிஏற்பாட்டின் மதிப்பீடு தயாரிக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ii) | மதிப்பீட்டு நிதிஏற்பாட்டில் 25 சதவீதத்திற்கு மேற்பட்ட சேமிப்பு காணப்பட்ட 21 சந்தர்ப்பங்கள் காணப்பட்டன. | அந்தந்த பணிகளின் முன்னுரிமை மற்றும் தேவைகளின் பிரகாரம் நிதி ஏற்பாட்டை மாற்றுவதன் மூலம் நிதி ஏற்பாட்டை சமப்படுத்தப்படுவதுடன், இந்த உள்ளக கட்டுபாட்டு முறைமையில் இந்த நிதி ஏற்பாடு சேமிக்கப்படுகின்றமை, விஞ்சுகின்றமை காணப்பட்ட போதும், திறைசேரி செலவின தலைப்பு இலக்கத்தின் பிரகாரம் (Treasury Code) நிதி ஏற்பாட்டை விஞ்சாதிருப்பதற்கோ அல்லது தேவையற்ற சேமிப்புக்கள் ஏற்படாதிருக்கும் வகையில் நடவடிக்கை எடுப்பதற்கோ கணக்காணிக்கப்படும் என தயவுடன் அறியத்தருகின்றோம். | சரியான ஆய்வின் அடிப்படையில் போதியளவான பிரகாரம் நிதிஏற்பாட்டின் மதிப்பீடு தயாரிக்கப்படல் வேண்டும். |
| (iii) | ஆரம்ப நிதி ஏற்பாட்டில் 23 சதவீதத்திற்கும் 387 சதவீத்திற்கும் இடையிலான அளவில் 06 செலவின விடயங்களுக்காக மிகை நிதி ஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்தது. | கணக்காய்வில் சுட்டிக் காட்டப்பட்ட பிரகாரம் மேலதிக நிதி ஏற்பாட்டை பெற்றுக் கொள்வதற்கு ஏற்பட்டதை ஏற்றுக் கொள்கின்றோம். 2022 ஆம் ஆண்டில் எரிபொருள் உராய்வு எண்ணெய்களின் விலைகள் கணிசமாக உயர்வடைந்து சென்றமையால் செலவின மதிப்பீட்டில் இருந்து கிடைத்த நிதி ஏற்பாடு போதியளவாக இருக்கவில்லை. அதனால் 306-2-3-0-1202 மற்றும் 306-2-4-0-1202 செலவின விடயங்களின் கீழ் செலவினங்களை செய்வதற்கு 306-2-4-39-2101(12) மற்றும் 306-2-4-39-2104(12) செலவின விடயங்களுக்காக செலவின | சரியான ஆய்வின் அடிப்படையில் போதியளவான பிரகாரம் நிதிஏற்பாட்டின் மதிப்பீடு தயாரிக்கப்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | மதிப்பீட்டின் மூலம் விண்ணக்கப்பட்ட போதும் நிதிஏற்பாடு பாதீட்டு மதிப்பீடுகளில் கிடைக்கப் பெறாமையினால் மேலதிக நிதிஏற்பாடு பெறவேண்டி ஏற்பட்டிருந்தது. | |

### 2.3 மிகை செலவினம்

பின்வரும் மிகை செலவினங்கள் வெளிப்படுத்தப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| 14 செலவின விடயங்களுக்காக ரூபா 30,536,215 நிதி ஏற்பாட்டை விஞ்சி செலவினங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | உங்களால் கணக்காய்வின் போது சுட்டிக் காட்டப்பட்ட முன்னர் குறிப்பிடப்பட் பிரகாரம் திணைக்களத்தின் உள்ளக நிதி வசதிகளுக்காக பகிர்ந்தளித்து அந்தந்த உப திணைக்களங்களின் உப செலவின விடயங்களில் மிகை செலவு விபரிக்கப்பட்டுள்ளது. மதிப்பீடு தயாரித்தல் 100 சதவீதம் சரியாக மேற்கொள்ள முடியாதிருந்தமையால், சில உப செலவின விடயங்களில் நிதி ஏற்பாட்டை விஞ்சி மேற்கொள்ள முடியும். எனினும், நிதி ஏற்பாட்டு முகாமைத்துவத்தின் மூலம் திறைசேரி செலவின விடயம் (Treasury Code) நிதி ஏற்பாட்டை விஞ்சி செலவினங்கள் செய்யப்படாதிருந்தமையை குறிப்பிடுகின்றோம். எதிர்காலத்தில் இவ்வாறான நிலைமையை இயலுமான வரை குறைத்து சரியான நிதி முகாமைத்துவத்தை பேணிச் செல்வதற்கு | அங்கீகரிக்கப்பட்ட நிதி ஏற்பாட்டு எல்லையில் மாத்திரம் செலவினங்கள் மேற்கொள்ளப்படல் வேண்டும். |

நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் குறிப்பிடுகின்றோம்.

## 2.4 அதிகாரம் இன்றிய தொழிற்படு நட்டம்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
| --- | --- | --- |
| களஞ்சிய முற்பண கணக்கில் ரூபா 13 மில்லியன் தொழிற்படு நட்டமொன்று காண்பிக்கப்பட்டதுடன், இது வரை அதனை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கணக்காய்வில் காண்பிக்கப்பட்ட விடயங்களுடன் இணங்குகின்றோம். இது தொடர்பாக தாமதம் இன்றி நடவடிக்கை எடுத்து தீர்த்து வைப்பதற்கு எதிர்காலத்தில் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என தயவுடன் அறியத்தருகினறோம். 1991 – 1993 காலப் பகுதியில் ஏல விற்பனையின் போது ஏற்பட்ட ரூபா 13,829,758 நட்டம் முன்னைய ஆண்டுகள் முதல் தொடர்ச்சியாக கொண்டுவரப்படுவதுடன், பதிவளித்தல் தொடர்பான இறுதி தீர்மானம் இது வரை கணக்கு பிரிவிற்கு அறிவிக்கப்படாமையினால் அது கணக்குகளில் சீராக்குவதற்கு முடியாதிருந்தது. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் உரிய தொழிற்படு நட்டத்தை தீர்த்து வைப்பதற்காக திறைசேரி நிதி ஏற்பாடு ஒதுக்கிக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2.5 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளுக்கு உடன்படல்

பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளுக்குரிய வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) 2022 திசெம்பர் 13 ஆம் திகதிய 2022/05 ஆம் | அரச கணக்குகள் வழிகாட்டியின் 2022/05 ஆம் | அரச நிதிச் சுற்றறிக்கை |

| | | | |
|---|---|---|---|
| | இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் 3.3 பந்தியின் படி கணக்கின் நோக்கம் இலக்கம் (iii) இன் கீழ் 2022.12.31 இல் உள்ளவாறு சகல கடப்பாடுகளும் பொறுப்புக்கள் இலக்கத்தின் பிரகாரம் வெளிப்படுத்த வேண்டிய போதிலும், புகையிரத திணைக்களத்தின் 03 உப திணைக்களங்களுக்குரிய ரூபா 1,532,473,670 பெறுமதியான கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் கணக்குகளில் வெளிப்படுத்தப்படவில்லை. | இலக்க சிகாஸ் நிகழ்ச்சித் திட்டத்தை உள்ளடக்கிய பொறுப்புக்கள் நிதிக் கூற்றுக்களின் இணைப்பு இலக்கம் (iii) இன் கீழ் நிதிக் கூற்றுக்களிலும் உள்ளடக்குதல் வேண்டும். அவ்வாறு உள்ளடக்குவதற்கு பொறுப்புக்களுக்குரிய செலவின விடயங்களை போதியளவான நிதி ஏற்பாடு காணப்படல் வேண்டும். எனினும், புகையிரத திணைக்களத்தின் பணி பொறுப்பின் பிரகாரம் பொது மக்கள் சேவை நடாத்திச் செல்வதற்கு சில சந்தர்ப்பங்களின் போது அவசர மற்றும் அத்தியவசிய கொள்வனவுகள் மேற்கொள்ள வேண்டியிருந்தது. இதன் காரணமாக சில பொறுப்புக்கள் சிகாஸ் நிகழ்ச்சித் திட்டத்திற்கு உள்ளடக்குவதற்கு போதியளவான நிதி நிலைமை காணப்படவில்லை. அவ்வாறே பொறுப்புக்கள் கூற்றுக்களில் உள்ளடக்கப்படவில்லை. அதனால் இந்த பொறுப்புக்கள் தொடர்பாக பொது திறைசேரியுடன் கலந்துரையாடி நிதிக் கூற்றுக்களில் தனியான பட்டியல் ஒன்றாக உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | ஒவ்வொரு உப திணைக்களத்தின் 2022.12.31 இல் உள்ளவாரான நிதிக் கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்ட பொறுப்புக்கள் மற்றும் | உதிரிப்பாக சேவை/ செயற்பாடுகள் நடவடிக்கைகளுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் வழங்குவதற்காக பொறுப்புக்களின் மூலம் முகாமைத்துவம் | திறைசேரியின் திரண்ட பொறுப்புக்கள் கூற்றில் காண்பிக்கப்படுகின்ற பொறுப்புக்களாக நிதிக் கூற்றுக்களில் |

| | | | |
|---|---|---|---|
| | கடப்பாடுகள் திறைசேரியின் SA 92 ஆம் இலக்க திரண்ட பொறுப்பு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட பெறுமதிக்கு சமமாக இருக்க வேண்டிய போதிலும், அந்த மீதியின் இடையே ரூபா 860,174,198 வேறுபாடு அவதானிக்கப்பட்டது. | செய்வதற்கு ஏற்பட்டிருந்தது. எதிர்காலத்தில் நிதி ஏற்பாடு இன்றிய பொறுப்புக்கள் அறிக்கை மூலம் இறுதி கணக்குகளில் வெளிப்படுத்துவதற்கு ஆலோசனை வழங்கி அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத்தருகின்றோம். | பொறுப்புக்கள் தொடர்பான கூற்றில் காண்பிக்கப்படல் வேண்டும். |
| (இ) | திறைசேரியின் SA 92 என்ற திரண்ட பொறுப்புக்கள் அறிக்கையின் பிரதான பொறியியல் ஓட்ட சக்தி, சமிஞ்சை மற்றும் தொலைத் தொடர்பு, போக்குவரத்து அதிகாரி (கொழும்பு) என்ற உப திணைக்களங்களில் செலவின பொறுப்புக்களின் மீதியாக பேணப்பட்ட ரூபா 40,686,052.67 மீதி காலம் போதியளவில் இல்லாதிருந்தமையை உறுதிப்படுத்துவதற்காக புகையிரத திணைக்களத்தின் பொறுப்புக்கள் பதிவேடு கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | இந்த சந்தர்ப்பத்தின் போது இதற்கு பதிலளிப்பதற்காக உரிய உபதிணைக்களத்தின் உறுதிப்படுத்தல்களை பெற்றுக்கொள்ளுதல் அவசியமாக இருந்தமையால் அதற்கான கால அளவு போதாதிருந்ததை தயவுடன் அறியத்தருகின்றோம். | பொறுப்புக்கள் மீதியை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு உரிய பொறுப்பு பதிவேடு சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |
| (ஈ) | நிதிப் பிரமாணம் 94(1) இன் பிரகாரம் (வழங்கல் மற்றும் சேவை அல்லாத) நிதி ஏற்பாட்டை விஞ்சி பொறுப்புக்கள் இருக்க முடியாதிருந்த போதிலும், மீளாய்வாண்டின் போது மேற்கொள்ளப்பட்ட தெரிவு பரிசோதனையின் போது 07 செலவின விடயங்களுக்குரிய நிதி ஏற்பாட்டை விஞ்சி ரூபா 306,637,665 பொறுப்புக்களுக்கு உடன்பட்டிருந்தது. | இந்த சந்தர்ப்பத்தின் போது இதற்கு பதிலளிப்பதற்காக உரிய உபதிணைக்களத்தின் உறுதிப்படுத்தல்களை பெற்றுக்கொள்ளுதல் அவசியமாக இருந்தமையால் அதற்கான கால அளவு போதாதிருந்ததை தயவுடன் அறியத்தருகின்றோம். | நிதிப் பிரமாணம் 94(1) இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

(உ) **நிகழத்தக்க பொறுப்புக்கள்**

| | | |
|---|---|---|
| புகையிரத திணைக்களத்திற்கு எதிராக வெளித்தரப்பினரால் 39 வழக்குகள் தொடரப்பட்டிருந்ததுடன், அது தொடர்பாக வெளிப்படுத்துதல் இறுதி கணக்குகளில் மேற்கொள்ளப்படவில்லை. | வெளித்தரப்பினருக்கு எதிராக தொடரப்பட்ட வழக்கு தொடர்பாக நிகழ்த்தக்க பொறுப்புக்களை எதிர்வரும் ஆண்டுகளின் நிதி கூற்றுக்களில் காண்பிப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுப்பதற்கு குறிப்பிடப்பட்டுள்ளது என தயவுடன் அறியத்தருகின்றோம். | வெளிப்படுத்துதல் வேண்டும். |

## 2.6 கணக்கீட்டு உத்தியோகத்தரினால் மேற்கொள்ளப்பட வேண்டிய உறுதிப்படுத்தல்

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 ஆவது பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்கீட்டு உத்தியோகத்தரால் பின்வரும் விடயங்கள் தொடர்பாக உறுதிப்படுத்த வேண்டியிருந்த போதும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| புகையிரத திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக பயனுள்ள உள்ளக கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச்செல்வதற்கு பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன், அந்த முறைமையின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக முன்னர் மேற்கொள்ளப்பட்ட மீளாய்வினை மேற்கொண்டு அதன் பிரகாரம் முறைமையை பயனுள்ளதாக ஆக்கிக் கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்தமையும், அந்த மீளாய்வை மேற்கொண்டு அதன் எழுத்துமூல பிரிதியொன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், அவ்வாறு மீளாய்வொன்று | கணக்காய்வின் போது சுட்டிக் காட்டப்பட்டுள்ள பிரகாரம் அறிக்கை சமர்ப்பிப்பதற்கு முடியாதிருந்த போதும் முறைமையின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக மீளாய்வு செய்து அது தொடர்பான அறிக்கை எதிர்காலத்தில் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத்தருகின்றோம். | உள்ளக கட்டுப்பாட்டு முறைமையினை அறிமுகப்படுத்தி காலத்திற்கு காலம் மீளாய்வு செய்யப்படல் வேண்டும். |

மேற்கொள்ளப்பட்டமைக்கான வெளிப்படுத்தல் கூற்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.7 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களின் ஏற்பாடுகளுடன் இணங்காமை சந்தர்ப்பங்கள் பகுப்பாய்வு செய்யப்பட்டு கீழே தரப்பட்டுள்ளது.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இ ணங்காமைகள் | | இணங்காமைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோஷலிச குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை. | | | |
| (i) | நிதிப் பிரமாணம் 104(1)(அ) | நானுஓயா நிலையான வீதி அதிகார பிரதேசத்தில் நிலையான வீதி பரிசோதனையின் கீழ் உள்ள வீதி பகுதிகள் மற்றும் புகையிரத ஆதனங்களுக்கு ஏற்பட்டுள்ள 02 இழப்புக்கள் தொடர்பாக நிதிப் பிரமானத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்காதிருந்ததுடன், அவற்றின் இழப்பினை சரியான இழப்பினை உரிய பிரகாரம் மதிப்பீடு செய்து பொறுப்பு வாய்ந்த தரப்பினரிடம் இருந்து அறவிடுவதற்கோ அல்லது அவர்களுக்கு எதிராக உரிய நடவடிக்கைகளோ எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த சந்தர்ப்பத்தின் போது இதற்கு பதிலளிப்பதற்காக உரிய உபதிணைக்களத்தின் உறுதிப்படுத்தல்களை பெற்றுக்கொள்ளுதல் அவசியமாக இருந்தமையால் அதற்கான கால அளவு போதாதிருந்ததை தயவுடன் அறியத்தருகின்றோம். | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ii) | நிதிப் பிரமாணம் 128(2)(இ) ஏற்பாடுகளின் பிரகாரம் மற்றும் 2015 யூலை 20 ஆம் திகதிய 01/2015 ஆம் இலக்க அரச நிதி கொள்கை சுற்றறிக்கையின் 08 ஆம் பந்தி | தீர்மானிக்கப்பட்டுள்ள நிலுவை வருமானம் தொடர்பாக அரையாண்டு அறிக்கை அந்த கால எல்லை முடிவடைந்ததன் பின்னர் அடுத்து வரும் மாத்திற்குள் அரச நிதிக் கொள்கை திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு கணக்காய்வாளர் நாயகத்திற்கு பிரதியுடன் சமர்ப்பிக்க வேண்டிய போதிலும், 2022 ஆம் ஆண்டின் அரையாண்டு அறிக்கை 2023 மார்ச் 27 ஆம் திகதி வரையிலும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | தீர்மானிக்கப்பட்டுள்ள திகதியில் அரையாண்டு நிலுவை வருமான அறிக்கை தவறொன்றினால் சமர்ப்பிக்க முடியாதிருந்ததுடன், 2023 மே மாதத்தின் போது அரச நிதி கொள்கை திணைக்களத்திற்கு சமர்ப்பிப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது. | நிதிப் பிரமாணம் மற்றும் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (iii) | நிதிப் பிரமாணம் 175(2) | நிலுவை பணம் தொடர்பாக தாமதம் இன்றி சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்ததுடன், சட்ட வழிகளோ அல்லது நிலுவை பணத்தை அறவிடுவதற்கு முடியாதிருக்குமாயின் நீண்ட கால நிலுவைப் பணம் திறைசேரியின் இணக்கப்படாட்டுடன் பதிவளிப்பதற்கோ தாமதமின்றி நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்த போதிலும், அதன் படி செயற்பட்டிருக்கவில்லை. | இந்த சந்தர்ப்பத்தின் போது இதற்கு பதிலளிப்பதற்காக உரிய உபதிணைக்களத்தின் உறுதிப்படுத்தல்களை பெற்றுக்கொள்ளுதல் அவசியமாக இருந்தமையால் அதற்கான கால அளவு போதாதிருந்ததை தயவுடன் அறியத்தருகின்றோம். | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | தேசிய பெறுகைகள் வழிகாட்டி கோவை மற்றும் பணிக் கோவை. | | | |
| (i) | 6.3.3 ஆம் பிரிவு | பெறுகை குழுவின் இணக்கப்பாட்டுடன் நியமிக்கப்பட்ட குழுவினால் கேள்வி திறக்கப்பட | பதிலளிக்கப்படவில்லை. | பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் ஏற்பாடுகளி |

| | | | | |
|---|---|---|---|---|
| | | வேண்டியிருந்த போதிலும், M6 Class மற்றும் S8 Class Locos இற்காக உதிரிப்பாகங்களை கொள்வனவு செய்யும் போது அவ்வாறு கேள்வி திறத்தல் குழு நியமிக்கப்பட்டிருக்கவில்லை. | | ன் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) | 6.3.6 ஆம் பிரிவு | கேள்வி திறத்தில் நடவடிக்கைகள் பெறுகை பணிக் கோவையில் 6.3.6 இல் காண்பிக்கப்பட்ட பிரகாரம் குறித்துரைத்த மாதிரி படிவத்தில் குறிப்பிட்டு திறக்கும் குழுவின் சகல அங்கத்தவர்களினாலும் கையொப்பமிடப்பட வேண்டிய போதிலும், M6 Class மற்றும் S8 Class Locos இற்காக உதிரிப்பாகங்களை கொள்வனவு செய்யும் போது அவ்வாறான எந்தவொரு படிவமும் பயன்படுத்தப்படாதிருந்துதுடன், கூறுவிலை சமர்ப்பித்த நிறுவனத்தின் பெயர் மற்றும் சமர்ப்பிக்கப்பட்ட கூறுவிலைகள் மாத்திரம் காண்பித்து வருகை தந்த உத்தியோகத்தர்களின் கையொப்பமிடப்பட்ட ஆவணங்கள் கோவையில் காண்பிக்கப்பட்டிருந்தது. | தற்போது (2018 ஆம் ஆண்டு முதல்) முறையான பிரகாரம் பிரிவுகளின் படி திறக்கும் குழு மாதிரி படிவத்தை பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என தயவுடன் அறியத்தருகின்றோம். | பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (iii) | 8.9.1 (ஆ) பிரிவு | பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 8.9.1(ஆ) இன் பிரகாரம் ரூபா 500,000 ஐ விஞ்சுகின்ற பொருட்கள் அல்லது சேவை ஒப்பந்தங்களுக்காக எழுத்து மூல ஒப்பந்த உடன்படிக்கை கைச்சாத்திட வேண்டிய போதிலும், கோவை இலக்கம் RTS/3095/11 இன் மூலம் உதிரிப்பாகங்களை | கணக்காய்வு செய்யப்பட்ட கோவை இலக்கம் RTS 3095/11 இன் மூலம் உதிரிப்பாகங்களை கொள்வனவு செய்யும் போது ஒப்பந்த காரருடன் ஒப்பந்த உடன்படிக்கையை கைச்சாத்திடப்படாமையை ஏற்றுக் கொள்ளவதுடன் | பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | கொள்வனவு செய்யும் போது வழங்குனருடன் ஒப்பந்த உடன்படிக்கையில் கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை. | தற்போது ரூபா 500,000.00 பெறுமதியை விஞ்சுகின்ற இந்த பிரிவின் சகல பெறுகைகளுக்காகவும் முறையாக கையொப்பமிடப்பட்ட எழுத்து மூல உடன்படிக்கை ஊடாக பொருட்கள் மற்றும் சேவைகள் கொள்வனவு செய்யப்படுகின்றது என விருப்பத்துடன் அறியத்தருகின்றோம். பெறுகைகள் பணிக் கோவையின் இலக்கம் 7.4 இன் படி கேள்வியின் செல்லுபடி கால எல்லையில் 50 சதவீத காலத்திற்குள் தொழில்நுட்ப மதிப்பீட்டு குழுவினால் மதிப்பீட்டு அறிக்கை வழங்கப்படல் வேண்டும். | |
| (iv) | பெறுகைகள் பணிக் கோவையின் இலக்கம் 7.4 இன் பிரகாரம் கேள்வியின் செல்லுபடிக் கால எல்லையில் 50 சதவீதத்தை உள்ளடக்கிய தொழில்நுட்ப மதிப்பீட்டு குழுவின் அறிக்கை வழங்கப்படல் வேண்டும். | a. இலக்கம் RLJ 3211/11 பெறுகைகளுக்காக அறிக்கை பெற்றுக் கொள்வதற்கு 187 நாட்கள் கடந்திருந்தது.<br>b. இலக்கம் SRS(C) RWS 3367/15 பெறுகைகளுக்காக அறிக்கை பெற்றுக் கொள்வதற்கு 169 நாட்கள் கடந்திருந்தது.<br>c. இலக்கம் SRS(C)RTS 3095/11 பெறுகைகளின் பிரகாரம் 330 நாட்களின் பின்னர் 2012 மே 19 ஆம் திகதி தொழில்நுட்ப மதிப்பீட்டு குழு அறிக்கை பெறப்பட்டிருந்தது. | (a) (b) (c -) தொழில் நுட்ப மதிப்பீட்டு குழு அறிக்கை முடியுமான சகல சந்தர்ப்பங்களும் மிகவும் விரைவாக வழங்குவதற்கு முடியாதிருந்தமைக்கான காரணத்தால் தாமதம் அடையுமாயின் அது தெளிவாக அறிக்கையுடன் சமர்ப்பிக்குமாறு தொழில்நுட்ப மதிப்பீட்டு குழுவிற்கு புகையிரத பொது முகாமையாளர் மூலம் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது என அறியத்தருகின்றோம். இவ்வாறு எதிர்காலத்தில் இடம் பெறுவதை தடுப்பதற்காக பெறுகை செயற்பாடுகளின் பிரகாரம் தேவைப்படுகின்ற | பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | அலுவலக மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளது டன், ஆசிய அபிவிருத்தி நிதி உதவியின் கீழ் Earnest & Young நிறுவனத்தின் மூலம் மேற்கொள்ளப்படுகின்ற ஆய்வின் பிரகாரம் பொருள் கோரிக்கைகள் இருப்பு வைத்தல் மற்றும் இருப்பு முகாமைத்துவத்திற்காக கணனி மயப்படத்தப்பட்ட வேலைத் திட்டமொன்று இந்த ஆண்டின் இறுதியின் போது அமுல்படுத்துவதற்கு திட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளது. | |
| (இ) | புகையிரத திணைக்களத்திற்கு பொது பிரமாணக் கோவையின் 03 ஆம் பந்தியின் 5.5 மற்றும் 5.6 உப பிரிவுகள் | ஒரு மாதத்திற்கு பின்னர் உரித்துக் கோராத பார்சல்கள், உரித்துக் கோராத ஆவணங்களுக்கு மாற்றி அது தொடர்பாக பிரதான கணக்காளருக்கு அறிவிக்க வேண்டிய போதிலும், அவ்வாறு நடவடிக்கை எடுக்காத சந்தர்ப்பங்கள் காணப்பட்டன. | இந்த சந்தர்ப்பத்தின் போது இதற்கு பதிலளிப்பதற்காக உரிய உபதிணைக்களத்தின் உறுதிப்படுத்தல்களை பெற்றுக்கொள்ளுதல் அவசியமாக இருந்தமையால் அதற்கான கால அளவு போதாதிருந்ததை தயவுடன் அறியத்தருகின்றோம். | புகையிரத திணைக்களம் பொது பிரமாணக் கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | புகையிரத கட்டளைச் சட்டத்தின் 200 ஆவது அத்தியாயத்தின் 31(அ), 31(ஆ), 31(இ), 31(ஈ) பிரிவுகள். | புகையிரத பொது முகாமையாளரின் எழுத்து மூல அனுமதி இன்றி புகையிரத ஒதுக்கப் பிரதேசத்தில் எந்தவொரு நடவடிக்கையும் மேற்கொள்ள முடியாதிருந்த போதிலும், வெலிகம புகையிரத நிலையத்திற்கு இடையே புகையிரத ஒதுக்க பிரதேசத்தில் அனுமதியற்ற கட்டிடங்கள் நிர்மாணிக்கப்பட்டிருந்தமையும் மேலும் ஒரு தரப்பினரால் | இந்த சந்தர்ப்பத்தின் போது இதற்கு பதிலளிப்பதற்காக உரிய உபதிணைக்களத்தின் உறுதிப்படுத்தல்களை பெற்றுக்கொள்ளுதல் அவசியமாக இருந்தமையால் அதற்கான கால அளவு போதாதிருந்ததை தயவுடன் அறியத்தருகின்றோம். | புகையிரத கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

அந்த ஒதுக்க பிரதேச காணியை கைப்பற்ற வியாபார நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றமையும் அவதானிக்கப்பட்டதுடன், அது தொடர்பாக புகையிரத பொது முகாமையாளருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. எனினும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் இது தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. இந்த அனுமதியற்ற நிர்மாணத்தில் 13 நிரந்தர அறைகள் ஸ்தாபிக்கப்பட்டமையால் அதற்கான நீர், மின்சாரம் வழங்கி உரிய உள்ளூராட்சி நிறுவனத்தின் மூ6லம் வியாபார அனுமதிப் பத்திரமும் வழங்கப்பட்டிருந்தன.

## 2.8 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) பொருட்கள் உரிய நியமத்துடனும், சரியான அளவுடனும் கிடைத்தமையை கொடுப்பனவை உறுதிப்படுத்துகின்ற உத்தியோகத்தரால் உறுதிப்படுத்தியதன் பின்னர் களஞ்சிய வழங்கல்களுக்காக கொடுப்பனவுகள் மேற்கொள்ள வேண்டியிருந்த போதிலும், அவ்வாறு எந்தவொரு உறுதிப்படுத்துலும் இன்றி வழங்குனருக்கு பணம் செலுத்தப்பட்டமையின் காரணமாக | எனினும், இந்த நிலைமையை குறைத்துக் கொள்வதற்காக தற்போது பயன்படுத்தப்படுகின்ற கேள்வி ஆவணங்களில் பெறுகை வழிகாட்டிக் கோவையிற்கு இணங்கும் வகையிலும், அதில் உள்ளடக்கப்பட்ட நிபந்தனைகள், கொடுப்பனவு நிபந்தனைகள், காப்புறுதிகளை பெற்றுக் கொள்ளுதல் போன்ற விடயங்களை உள்ளடக்கும் வகையில் புதியகேள்வி ஆவணம் ஒன்றை தயாரிப்பதற்கும் இரு தரப்பினருக்கும் பாதகமில்லாத வகையில் முறையான நடவடிக்கை படிவத்தை தயாரிப்பதற்கும் (உரிய காலத்தில் பொருட்கள் வழங்குவதற்கு தவறுமாயின், வழங்கலில் தாமதம், குறைவாக வழங்குதல், இருப்பு இழப்புக்கள், மாதிரிகளுக்கு இணங்காத இருப்புக்கள் போன்ற விடயங்கள் தொடர்பாக எடுக்கக் கூடிய நடவடிக்கைகளை உள்ளடக்கும் வகையில்) ஆவணங்களை தயாரித்தல் தொடர்பாக பரிந்துரையினை பெற்றுக் கொள்வதற்கு தொழில்நுட்ப மதிப்பீட்டு குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. அந்த குழுவினால் இது வரையில் அதற்குரிய கேள்வி ஆவணங்களின் வரைவு தயாரிக்கப்பட்டுள்ளதுடன், பெறுகை குழுவிற்கு சமர்ப்பித்து | கொடுப்பனவை உறுதிப்படுத்துகின்ற உத்தியோகத்தரால் உறுதிப்படுத்தியதன் பின்னர் முறையான அதிகார பலத்தின் கீழ் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வழங்கப்படாத பொருட்களுக்காக ரூபா 95,763,117 தொகை செலுத்தப்பட்டிருந்தது. | அங்கீகாரத்தை பெற்றுக் கொண்டதன் பின்னர் எதிர்வரும் பெறுகை நடவடிக்கைகளின் போது இந்த நிலைமையை அநேகமாக குறைத்துக் கொள்ள முடியும் என அறியத்தருகின்றோம்.<br><br>இதற்கு மேலதிகமாக தற்போது வழங்கப்படாதுள்ள பொருட்களுக்காக மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவுகளை தீர்த்து வைப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுப்பதற்காக பெறுகை உத்தியோகத்தர்களின் மேற்பார்வையின் கீழ் இரண்டு விடய பொறுப்பு எழுது வினைஞர்கள் நியமித்து 06 மாதங்களுக்குள் இந்த நடவடிக்கைகளை பூர்த்தி செய்வதற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | |
| (ஆ) | Item No: 18 மற்றும் 19 இன் கீழ் MS MTU Asia Pvt நிறுவனத்தில் கட்டளை இடப்பட்ட ரூபா 5,451,181 ஆன (Euro 31,586.40 X 172.58) 180 உதிரிப்பாகங்கள் கிடைக்காதிருந்ததுடன் , இந்த உதிரிப்பாகங்கள் 2013 மே 21 ஆம் திகதி CFS-1 Ware House அதில் ஏற்பட்ட தீயினால் அழிவடைந்திருந்தமை கோவையின் தகவல்களில் காண்பித்து மீண்டும் கேள்வி கோருவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. எனினும், களஞ்சிய முற்பண கணக்கில் தீயினால் அழிவடைந்த பொருட்களின் பெறுமதியாக காண்பிக்கப்பட்ட மீதியில் இந்த விடயங்கள் இல்லாதிருந்ததுடன், ரூபா 5,451,181 ஆன இந்த உதிரிப்பாகங்களின் | கணக்காய்வினால் சுட்டிக் காட்டப்பட்ட விடய இலக்கம் 18 மற்றும் 19 இற்குரிய வழங்குனர்களினால் கப்பலில் இடப்பட்டதாக கோவையின் பிரகாரம் தெளிவாகின்றதுடன், விடுவிக்கப்பட்ட சந்தர்ப்பத்தின் போது அந்த பொருட்கள் அடங்கிய உரைகள் (Box) காணப்படாதிருந்ததாக துறைமுக பிரிவில் அறிக்கையிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் அந்த விடயங்கள் 2013.05.21 ஆம் திகதி துறைமுக களஞ்சியத்தில் ஏற்பட்ட தீயினால் அழிவடைந்த பொருட்களாக கருதி மீண்டும் கட்டளையிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.<br><br>கோவையின் பிரகாரம் இந்த கட்டளைகளுக்குரிய விடயங்களில் 02 உரைகள் கப்பலில் இடப்பட்டிருந்ததுடன், பிரதி பிரதான பொறியியலாளரின் 2013.11.18 ஆம் திகதிய 3095/11 இன்டென்டு இற்குரிய உரைகள் (Box) தீயினால் அழிவடைந்ததாக காண்பித்த போதும், உரைகளின் எண்ணிக்கை எத்தனை என குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.<br><br>அதன் பிரகாரம் மீண்டும் கட்டளையிட்டு துறைமுக களஞ்சியத்தினுள் ஏற்பட்ட தீயினால் அழிவடைந்த பொருட்களாக இருந்ததை தயவுடன் அறியத்தருகின்றோம்.<br><br>RTS 3095/11 கோவைக்கு உரிய இலக்கம் 230 இன் 2014.05.27 பொருள் பெறுவனவு பத்திரம் புகையிரத களஞ்சிய உப திணைக்களத்தின் கணக்கு பிரிவிற்கு 2014 ஆகஸ்ட் மாதம் கிடைத்து 2014 செப்டமபர் மாதம் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.<br><br>மேலும், அந்த பொருள் பெறுவனவு குறிப்பில் கீழே குறிப்பிடப்பட்ட இரண்டு விடயங்களில் வழங்கப்படாத பொருட்கள் (Short Item) ஆக குறிப்பிடப்பட்டிருந்தது. அதனால் களஞ்சிய கணக்கின் கீழ் வழங்கப்படாத பொருட்களாக 2014 முதல் இது வரை அறிக்கையிடப்பட்டுள்ளது. அந்த பொருட்களை மீண்டும் பெற்றுக் கொள்ளல் தொடர்பாக வருடம் முழுவதும் | பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தருக்கு எதிராக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். இந்த சம்பவங்களின் போது அரசாங்கத்திற்கு ஏற்பட்ட நட்டம் மற்றும் நிர்வாக செயற்திறனின்மை மற்றும் முரண்பாடுகள் தொடர்பாக பொறுப்புவாய்ந்த உத்தியோகத்தர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

பெறுமதி கிடைக்காத பொருட்களாக 2022 இன் களஞ்சிய முற்பண கணக்கில் காண்பிக்கப்பட்டிருந்தது. அவ்வாறு இதன் மூலம் கொள்வனவு செய்யப்பட்டுள்ள பொருட்கள் (Boxes) கண்டறியப்படுள்ளமைக்கும் அவை அழிவடையாதிருக்குமாயின் சராசரி முறைமையின் அடிப்படையில் அவற்றை விடுவித்துக் கொள்வதற்கு முடியுமாக இருந்ததுடன், 2013 நவம்பர் 18 ஆம் திகதிய DME இனால் SRS இற்கு அனுப்பப்பட்ட கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் பணம் செலுத்தப்பட்ட போதும், வழங்குனரினால் வழங்கப்பட்டதா என உறுதிப்படுத்தாத ரூபா 5,451,181 ஆன இந்த பொருட்கள் தீயினால் அழிவடைந்ததாக ஆவணங்கள் சமர்ப்பித்து அந்த பொருட்களை மீண்டும் கட்டளை இடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தா என்பது தொடர்பாக பிரச்சினைகள் எழுந்திருந்தது.

கடிதம் மூலம் உரிய பிரிவிற்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

| Item name | Part No | Quantity | Amount (EURO) | Amount (LKR) (LC, Custom & Landing) |
|---|---|---|---|---|
| 1) Bearing Main /0-0/UP/RIL/ | 5240336101 | 90 | 13,335.30 | 2,287,082.68 |
| 2) Bearing Main /0-0/LO/SPT | 5240336602 | 90 | 18,251.10 | 3,175,464.16 |
| | | 180 | 31,586.40 | 5,462,546.84 |

## 2.9 முற்பணம் வழங்குதலும் தீர்த்தலும்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| 2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதிய 01/2020 ஆம் இலக்க அரச நிதி சுற்றறிக்கையின் 9.1 இன் பிரகாரம் திருத்தப்பட்ட நிதிப் பிரமானம் 371(2)(ஆ) பந்தியின் படி ‘‘செயல் நிமித்த உப கட்டுநிதி பெற்ற பதவி நிலை உத்தியோகத்தரால் அந்த பணி நிறைவு பெற்றவுடன் அந்த செயல் நிமித்த உப கட்டுநிதி தீர்த்து வைக்கப்படல் வேண்டும்’’ மற்றும் நிதிப் பிரமாணம் 371(5) இன் பிரகாரம் ‘‘உப கட்டுநிதி வழங்கப்பட்டதன் பின்னர் உரிய பணி நிறைவு பெற்று 10 நாட்களுக்குள் அந்த உப கட்டுநிதி தீர்த்து வைக்கப்படல் வேண்டும்’’ ஆக ஏற்பாடுகள் வழங்கப்பட்டிருந்த போதும், ரூபா 5,052,005 ஆன உப கட்டுநிதி தொடர்பாக அதன் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | செயல் நிமித்த உப கட்டுநிதி 10 நாட்களுக்குள் தீர்க்க வேண்டியிருந்த போதும் அவ்வாறு தீர்த்து வைக்கப்படாமை தொடர்பாக திணைக்களத்திற்கு அறிவிப்பதற்கும் அதனை குறித்துரைத்த பிரகாரம் தீர்த்து வைப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுக்கப்படும். | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் உப கட்டுநிதி குறித்துரைத்த கால எல்லையில் தீர்த்து வைக்கப்படல் வேண்டும். |

## 2.10 வங்கி கணக்கு செயற்பாடுகள்

வங்கி கணக்கு செயற்பாடுகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவு கணக்காய்வு பரிசோதனைகளின் போது வெளிப்படுத்தப்பட்ட குறைபாடுகள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| இலக்கம் 1761001 2902 7313 என்ற கணக்கில் ரூபா 271,163 ஆன 07 காசோலைகள் மதிப்பிழந்திருந்த போதிலும், அது தொடர்பாக நிதிப் பிரமானம் 189 இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்து தீர்த்து | இந்த 07 காசோலைகளையும் தீர்த்து வைப்பதற்காக அனுப்பப்பட்ட காசோலைகளை மீண்டும் தாமத வழுக்களினால் வருமானத்தில் செலவு வைத்தமையினால் இரட்டை | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| வைக்கப்பட்டிருக்கவில்லை. | கணிப்பீட்டு வுழு ஏற்பட்டிருந்தமையால் 2023 யூன் மாதத்தின் போது அந்த வழுக்களை சரிசெய்வதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும். | |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) நேர அட்டவணையின் பிரகாரம் புகையிரதம் ஓடுதல் ஆரம்பித்தல் 1865 ஆம் ஆண்டாக இருந்த போதிலும், இது வரை நேர அட்டவணையின் பிரகாரம் புகையிரதம் ஓடாதிருந்தமை புகையிரதத்தை பயன்படுத்துபவர்களின் முறைப்பாடுகள் கிடைத்துள்ளது. 2022 இன் போது திட்டமிடப்பட்ட புகையிரத ஓட்ட தடவைகளின் எண்ணிக்கை 120,993 ஆக இருந்ததுடன், அதனுள் குறித்துரைத்த நேரத்திற்கு ஓடப்பட்டிருந்த புகையிரத தடவைகளின் எண்ணிக்கை 32,844 ஆகும். இரத்துச் செய்யப்பட்ட புகையிரத ஓட்ட தடவைகளின் எண்ணிக்கை 10,077 ஆக காணப்பட்டது. அதன் பிரகாரம் 72 சதவீத புகையிரதம் குறித்துரைத்த பிரகாரம் ஓட்டத்தில் ஈடுபட்டிருக்கவில்லை. 2022 ஆம் ஆண்டின் போது 23 புகையிரத என்சின்கள் மற்றும் 36 புகையிரத தொகுதிகள் குறைவாக பயன்படுத்தப்பட்டிருந்த போதிலும், 2021 இன் போது இந்தியாவில் இருந்து 06 | பதிலளிக்கப்படவில்லை. | திணைக்களத்தின் இலக்கு மற்றும் தூர நோக்கின் பிரகாரம் நடவடிக்கை எடுத்து நிலைபேறான அபிவிருத்தி இலக்கை அடையும் வகையில் புகையிரத செயலாற்றலை நுகர்வோர்களுக்கு சமீபமாகும் வகையில் அபிவிருத்தி செய்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | புகையிரத தொகுதிகள் மற்றும் 10 என்ஜின்கள் அ.டொலர் 90 மில்லியன் செலுத்தி பெறப்பட்டிருந்தது, நீண்ட காலம் முதல் ஒட்டுமொத்த பிரயாணிகள் போக்குவரத்தில் 6 சதவீதம் மற்றும் பொருள் போக்குவரத்தில் 6.5 சதவீத பங்களிப்பை வழங்குகின்ற புகையிரத சேவை அதன் பங்களிப்பை மேலே கட்டியெழுப்புவற்கு தவறியிருந்ததுடன், 1934 இன் போது புகையிரத போக்குவரத்து வலையமைப்பில் 1521 கிலோ மீற்றர் ஆக இருந்த போதிலும், 2021 வரையில் இது 1465 கிலோ மீற்றர் வரை 56 கிலோ மீற்றரால் குறைவடைந்திருந்தது. அந்த குறைவு பெலிஅத்த வரையிலான கிலோ மீற்றர் 32 கிலோ மீற்றரையும் புதிதாக சேர்க்கப்பட்டதன் பின்னர் ஏற்பட்டிருந்தது. | | |
| (ஆ) | பாதுகாப்பற்ற புகையிரத குறுக்கு வீதிகளில் பாதுகாப்பிற்காக மணியோசை மற்றும் மின்சார முறைமைகள் 200 ஐ ஸ்தாபித்தல். | | |
| * | உடன்படிக்கையின் பிரகாரம் 2017 சனவரி 27 ஆம் திகதி வரையில் 200 வீதி பாதுகாப்பு முறைகள் பூர்த்தி செய்யப்பட்டு கையளிக்க வேண்டிய போதிலும், 2022 ஆகஸ்ட் 01 ஆம் திகதி வரையில் 200 முறைமைகளும் நிர்மாணிக்கப்பட்ட போதிலும், அதில் 10 உரிய பிரகாரம் பரீட்சித்து புகையிரத திணைக்கத்திற்கு மீண்டும் | இந்த ஒப்பந்தத்தின் பிரகாரம் உத்தரவாத காலத்தில் ஒப்பந்தகாரர் முறைமையினை பழுதுபார்க்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டியிருந்ததுடன், உத்தரவாத காலத்தின் பின்னர் முறைமையை பழுதுபார்க்கும் செயற்பாடுகள் பிரதான பொறியியலாளர் சமிஞ்சை | உடன்படிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்காமை தொடர்பாக நடவடிக்கைகள் எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கையளிக்கப்பட்டிருக்கவில்லை ல. | மற்றும் மின்சார உப திணைக்களத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஸ்தாபிக்கப்பட்டுள்ள மணியோவை மற்றும் மின்சார முறைமை செயலிழந்தமை தொடர்பான தகவல்கள் பிரதான பொறியியலாளர் சமிஞ்சை மற்றும் மின்சார உப திணைக்கத்திற்கு அறிக்கையிடப்படுவதுடன், அது தொடர்பாக மிகுதி நடவடிக்கைகள் அந்த திணைக்களத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. | |
| * | 2022 ஆகஸ்ட் வரையில் ஒப்பந்த தொகையில் 95 சதவீதமான ரூபா 1,003,446,336 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த போதிலும், பொருத்தப்பட்டு ஒரு வருட காலம் கடப்பதற்கு முன்னர் கீழ் வீதியில் நிர்மாணிக்கப்பட்ட மணி மற்றும் மின்சார முறைமைகளில் 142 இல் 60 மற்றும் புத்தளம் வீதியில் பொருத்தப்பட்ட 46 மணி மற்றும் மின்சார முறைமைகளில் 34 உம் ஆக ஒட்டுமொத்தமாக 94 மணி மற்றும் மின்சார முறைமைகள் செயலிழந்து காணப்பட்டது. அதன் பிரகாரம் பொருத்தப்பட்ட மணி மற்றும் மின்சார முறைமைகளில் 50 சதவீத்திற்கு அண்ணளவான அளவு செயலிழந்தமையின் அடிப்படையில் அதற்காக செலவிடப்பட்ட ரூபா 500 மில்லியனுக்கு அண்ணளான செலவினம் பயனற்ற செலவினத்திற்கு உட்பட்டிருந்ததுடன், இந்த செயலிழந்து மணி மற்றும் மின்சார முறைமைகளின் காரணமாக | 2022 ஆகஸ்ட் வரையில் ஒப்பந்த தொகையில் 95 சதவீதம் செலுத்தப்படாதிருந்ததுடன், ஒப்பந்த தொகையில் 79 சதவீதம் மாத்திரமே செலுத்தப்பட்டிருந்தது. அ.டொலர் 5,130,659.10 (801,649,056.41) ஆகவும் இறுதி 10 முறைமைகளுக்காக எந்தவொரு பணமும் செலுத்தப்படவில்லை.<br><br>* மேற்கூறப்பட்ட வழுக்களுடன் 94 முறைமைகளுக்காக வெள்ளம் மற்றும் அவசர விபத்துக்களில் அழிவடைந்த 20 முறைமைகளும் உள்ளடங்குகின்றது. அதன் பிரகாரம் வழுக்களுடன் உள்ள முறைமை, பயன்படுத்தப்படுகின்ற 74 முறைமைகள் ஆகும். இந்த வழுக்களுடனான முறைமைகள் 2023 மே வரையில் 74 முதல் 27 வரை குறைக்கப்பட்டுள்ளது. நீண்ட கால மின்சார துண்டிப்பினால் பட்டரி | எதிர்பார்த்த செயற்திட்ட நோக்கங்கள் அடையாமை தொடர்பாக விசாரணை நடத்தி தேவையான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

அங்கீகரிக்கப்பட்ட புகையிரத குறுக்கு வீதிகள் பயணம் செய்த நபர்கள் மற்றும் மோட்டார் வாகனங்கள் புகையிரதத்துடன் மோதி அநோகமான விபத்துக்கள் மீளாய்வாண்டின் போது அறிக்கையிடப்பட்டிருந்தது. இந்த நிலைமையை அடிப்படையில் புகையிரத குறுக்கு வீதிகளை பயன்படுத்துபவர்களின் உயிர் மற்றும் ஆதனங்களுக்கு அதிக பாதுகாப்பற்ற நிலைமை ஏற்பட்டிருந்த போதிலும், செயற்திட்டத்தின் மூலம் எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு திணைக்களம் தவறியிருந்தது.

பாதிப்படைந்ததன் அடிப்படையில் ஏற்பட்ட வழுக்களாக இருந்ததுடன், அதனிடையே கணிசமான எண்ணிக்கை சரி செய்யப்பட்டுள்ளது. மிகுதி வழுக்களுடன் உள்ள முறைமைகளில் இலத்திரனியல் துணைப்பாகங்கள் கட்டளையிடப்பட்டுள்ளது. அந்த உபகரணங்கள் கிடைத்த பின்னர் மிகுதி வழுக்களுடனான முறைமைகளை சரி செய்ய முடியும். இதற்கு மேலதிகமாக நீண்ட கால திட்டமிடலாக

1. மத்திய மயப்படுத்தப்பட்ட செயற்பாட்டு முறைமையொன்று (Centralized Controlled System) கொள்வனவு செய்வதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

2. மிகை செயற்பாடுள்ள முறைமைகளின் அளவினால் பராமரிப்பு நடவடிக்கைகள் மற்றும் மின்சார பொறியியலாளர் உப திணைக்களத்திற் கு செய்வதற்கு வசதியீனமாக இருந்தமையால் மூன்றாம் தரப்பினரின் பராமரிப்பு சேவையை பெற்றுக் கொள்வதற்காக திட்டமிடப்பட்டுள்ளது.

(இ) அம்பேபுஸ்ஸ கல்குவாரியில் மாதாந்த சராசரி உற்பத்தி அளவு 1000 கியுப்கள் ஆக இருந்த போதும் 2022 ஆம் ஆண்டில் சனவரி மற்றும் நவம்பர் போன்ற மாதங்களின் போது மாத்திரம் கருங்கல் 600

இந்த சந்தர்ப்பத்தின் போது இதற்கு பதிலளிப்பதற்காக உரிய உபதிணைக்களத்தின் உறுதிப்படுத்தல்களை பெற்றுக்கொள்ளுதல் அவசியமாக இருந்தமையால்

எதிர்பார்க்கப்பட்ட உற்பத்தி இயலளவை அடைந்து கொள்வதற்கான காரணங்களை பரீட்சித்து அதற்கு தீர்வினை காணல்

| | | | |
|---|---|---|---|
| | கியுப் இனை விட மேலதிகமாக உற்பத்தி செய்யப்பட்டிருந்ததுடன், ஏனைய 08 மாதங்களிலும் உரிய இலக்கிடப்பட்ட கியுப் அளவில் ¼ இற்கும் குறைந்த அளவில் உற்பத்தி செய்யப்பட்டிருந்தது. மேலும் 2022 மே மாதம் 23 ஆம் திகதி முதல் 2022 யூன் மாதம் 23 ஆம் திகதி வரையான மாதத்தில் எந்தவொரு உற்பத்தியும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | அதற்கான கால அளவு போதாதிருந்ததை தயவுடன் அறியத்தருகின்றோம். | வேண்டும். |
| (ஈ) | கெலிஓய புகையிரத நிலையத்திற்கு அருகில் கேபியன் கட்டொன்றை நிர்மாணிக்கும் போது காணப்பட்ட அணைக்கட்டில் காணப்பட்ட அளவில் நிர்மாணிக்கப்பட்டிருக்குமாயின் அதற்காக மேலதிகமாக கருங்கல் தேவையில்லாத போதும் களஞ்சியம் ஊடாக இந்த வேலைத் தளத்திற்கு கருங்கல் 20 கியுப் வழங்கப்பட்டமை அவதானிக்கப்பட்டது. கருங்கல் அளவினை அதிகரிப்பதற்கு ஏற்படுமாயின் புதிய திட்டமொன்றின் அடிப்படையில் மேற்கொள்ள வேண்டியமை காணப்பட்ட போதும், பரிசோதனை திகதியான 2022 யூன் 28 ஆம் திகதி வரையிலும் அவ்வாறு புதிய திட்டமொன்று அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த சந்தர்ப்பத்தின் போது இதற்கு பதிலளிப்பதற்காக உரிய உபதிணைக்களத்தின் உறுதிப்படுத்தல்களை பெற்றுக்கொள்ளுதல் அவசியமாக இருந்தமையால் அதற்கான கால அளவு போதாதிருந்ததை தயவுடன் அறியத்தருகின்றோம். | களஞ்சியத்தில் இருந்து பொருட்களை விநியோகிக்கும் போது அவற்றின் தேவையினை சரியான இனங்கண்டு அதன் பிரகாரம் மாத்திரம் விநியோகிக்கப்படல் வேண்டும். |
| (உ) | கண்டி கெடம்பே இருவழி பாதையின் இரு பக்க காண் முறைமையினை நிர்மாணிப்பதற்காக பிரதான | இந்த சந்தர்ப்பத்தின் போது இதற்கு பதிலளிப்பதற்காக உரிய உபதிணைக்களத்தின் | அங்கீகரிக்கப்பட்ட திட்டத்தின் பரிகாரம் மாத்திரம் நிர்மாணங்கள் |

| | | | |
|---|---|---|---|
| | பொறியியலாளர் (வீதி மற்றும் நிர்மாணம்) இனால் 2021 ஆகஸ்ட் மாதம் தயாரிக்கப்பட்ட இலக்கம் 22787 என்ற பக்க வடிகான் திட்டத்திற்கு புரம்பாக இந்த வடிகாண் முறைமை நிர்மாணிக்கப்பட்டிருந்ததுடன், அது பிரதி பிரதான பொறியியலாளர் மற்றும் மாவட்ட பொறியியலாளர் (மேல்) இன் வாய் மொழி மூல ஆலோசனையின் அடிப்படையில் வழங்கப்பட்ட திட்டத்தில் வெளியே நிர்மாணிக்கப்பட்டிருந்தமை வெளிப்படுத்தப்பட்டிருந்தது. | உறுதிப்படுத்தல்களை பெற்றுக்கொள்ளுதல் அவசியமாக இருந்தமையால் அதற்கான கால அளவு போதாதிருந்ததை தயவுடன் அறியத்தருகின்றோம். | மேற்கொள்ளப்படல் வேண்டும். |
| (ஊ) | காலி நிலையான வீதி அதிகார பிரதேசத்தில் காணப்படுகின்ற புகையிரத குறுக்கு வீதிகளின் எண்ணிக்கை 75 ஆக இருந்ததுடன், அதில் ஸ்தாபிக்கப்பட்டுள்ள (Bell & Light) மணி மற்றும் வெளிச்சத்துடனான புகையிரத குறுக்கு வீதிகளின் எண்ணிக்கை 50 ஆகும். அதில் (Bell & Light) மணி மற்றும் வெளிச்சத்துடனான புகையிரத குறுக்கு வீதிகளில் 31 செயலிழந்து காணப்பட்டது. | இந்த சந்தர்ப்பத்தின் போது இதற்கு பதிலளிப்பதற்காக உரிய உபதிணைக்களத்தின் உறுதிப்படுத்தல்களை பெற்றுக்கொள்ளுதல் அவசியமாக இருந்தமையால் அதற்கான கால அளவு போதாதிருந்ததை தயவுடன் அறியத்தருகின்றோம். | தேவையான பராபரிப்பினை சரியான பிரகாரம் மேற்கொண்டு அவற்றின் நலன்கள் பெறப்படல் வேண்டும். |

**3.2 திட்டமிடல்**

2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதிய இலக்கம் 02/2020 என்ற அரச நிதி சுற்றறிக்கையின் 03 ஆம் பந்தியின் பிரகாரம் வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கும் போதும் மற்றும் அவற்றை அமுல்படுத்தும் போதும் பின்வரும் குறைபாடுகள் வெளிப்படுத்தப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) **செயல்நடவடிக்கைத் திட்டம்** | | |
| 2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதிய 02/2020 ஆம் இலக்க அரச நிதி சுற்றறிக்கையின் 03 ஆம் பந்தியின் பிரகாரம் அரசாங்கத்தின் நிறுவனம் ஒவ்வொரு வருடத்திற்காகவும் அங்கீகரிக்கப்பட்ட பாதீட்டு மதிப்பீட்டை அமுல்படுத்துவதற்காக எதிர்வரும் ஆண்டிற்கான செயல் நடவடிக்கைத் திட்டம் நடப்பாண்டிலன் திசெம்பர் 15 ஆம் திகதிக்கு முன்னர் தயாரிக்கப்பட்டு பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், அந்த திகதிக்கு தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், அந்த சுற்றறிக்கையின் வழிகாட்டி இலக்கம் 12 இன் பிரகாரம் செயல்நடவடிக்கை திட்டத்தில் உள்ளடக்கப்பட வேண்டிய ஏனைய விபரங்கள் மற்றும் படிவங்களின் பிரகாரம் தகவல்கள சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | புகையிரத திணைக்களத்தில் 2023 ஆம் ஆண்டிற்கான செயல் நடவடிக்கைத் திட்டம் 2023.01.06 ஆம் திகதி போக்குவரத்து அமைச்சுக்கு கையளிபக்கப்பட்டுள்ளதுடன், அது 2023.02.02 ஆம் திகதி அங்கீகரிக்கப்பட்டுள்து என தயவுடன் அறியத்தருகின்றோம். | சுற்றறிக்கை ஆலோசனையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

(ஆ) **பிரஜைகள்/ சேவை நலன் விஞ்ஞாபனத்தை அறிமுகப்படுத்துதல்.**

| | | |
|---|---|---|
| 2018 சனவரி 14 ஆம் திகதிய இலக்கம் 05/2008(1) என்ற சுற்றறிக்கையில் திருத்தப்பட்ட 2008 பெப்ரவரி 06 ஆம் திகதிய 05/2008 ஆம் இலக்க அரச நிர்வாக மற்றும் முகாமைத்து வஅமைச்சு சுற்றறிக்கை மூலம் அறிமுகப்படுத்தப்பட்ட பிரஜைகள் விஞ்ஞாபனத்தை செயற்பாட்டிற்கு கொண்டுவருவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த சந்தர்ப்பத்தின் போது இதற்கு பதிலளிப்பதற்காக உரிய உபதிணைக்களத்தின் உறுதிப்படுத்தல்களை பெற்றுக்கொள்ளுதல் அவசியமாக இருந்தமையால் அதற்கான கால அளவு போதாதிருந்ததை தயவுடன் அறியத்தருகின்றோம். | சுற்றறிக்கை ஆலோசனையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3.3 பணிப் பொறுப்புக்கள் நிறைவேற்றப்படாமை

| **கணக்காய்வு அவதானிப்பு** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்** | **பரிந்துரை** |
|---|---|---|
| மேற்பார்வை முகாமையாளர் (கட்டிடம்) கண்டி பிரிவின் பராமரிப்பு வேலைகளுக்காக தயாரிக்கப்பட்டிருந்த வருடாந்த செயற்திட்டத்தை பரீட்சிக்கும் போது திட்டமிடப்பட்ட 126 வேலைகளில் மிகவும் குறைந்த பராமரிப்பு வேலைப் பகுதி மாத்திரம் அதாவது 26 வேலைகள் மாத்திரமே நிறைவேற்றப்பட்டிருந்தது. | இந்த சந்தர்ப்பத்தின் போது இதற்கு பதிலளிப்பதற்காக உரிய உபதிணைக்களத்தின் உறுதிப்படுத்தல்களை பெற்றுக்கொள்ளுதல் அவசியமாக இருந்தமையால் அதற்கான கால அளவு போதாதிருந்ததை தயவுடன் அறியத்தருகின்றோம். | வருடாந்த திட்டத்திற்கு இணங்க செயற்படல் வேண்டும். |

**3.4 எதிர்பார்க்கப்பட்ட பூர்த்தி மட்டம் பெறப்படாமை.**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| கெலிஓய புகையிரத நிலையத்திற்கு அருகில் கேபியன் கட்டை நிர்மாணிக்கும் போது அதன் பிரகாரம் நிர்மாணிக்கப்பட்ட அளவிலும் வேறுபாடு காணப்படாதிருக்கும் போது D Note மூலம் பயன்படுத்தப்பட்ட கேபியன் வலை (box) மீண்டும் களஞ்சியத்திற்கு கையளிக்கப்படாதிருக்கும் போது, புதிய கேபியன் வலை (box) 23 அதாவது 40 மீற்றர் நீளம் களஞ்சியத்தில் இருந்து விநியோகிக்கப்பட்டமை அவதானிக்கப்பட்டது. கருங்கல் 20 கியுப் மற்றும் கேபியன் வலை (box) 23 இற்காக ரூபா 681,700 பயனற்ற கிரயமொன்று செலவிடப்பட்டிருந்தது. | இந்த சந்தர்ப்பத்தின் போது இதற்கு பதிலளிப்பதற்காக உரிய உபதிணைக்களத்தின் உறுதிப்படுத்தல்களை பெற்றுக்கொள்ளுதல் அவசியமாக இருந்தமையால் அதற்கான கால அளவு போதாதிருந்ததை தயவுடன் அறியத்தருகின்றோம். | களஞ்சியத்தில் இருந்து பொருட்களை விநியோகித்தல் உரிய அங்கீகாரத்தின் கீழ் மேற்கொள்ள வேண்டியிருந்ததுடன், சரியான அறிக்கை பேணிச் செல்லப்படல் வேண்டும். |

**3.5 செயற்திட்டத்தை நிறைவேற்றுவதில் தாமதம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) மேற்பார்வை முகாமையாளர் (கட்டிடம்) கண்டி பிரிவில் 2022 ஆம் ஆண்டின் போது உத்தேசிக்கப்பட்ட 08 செயற்திட்டங்களின் பரிசோதனை திகதியான 2022 யூன் 28 ஆம் திகதி வரையிலும், ஒரு முன்மொழிவு மாத்திரமே ஆரம்பிக்கப்பட்டிருந்தது. | இந்த சந்தர்ப்பத்தின் போது இதற்கு பதிலளிப்பதற்காக உரிய உபதிணைக்களத்தின் உறுதிப்படுத்தல்களை பெற்றுக்கொள்ளுதல் அவசியமாக இருந்தமையால் அதற்கான கால அளவு போதாதிருந்ததை தயவுடன் அறியத்தருகின்றோம். | உத்தேசிக்கப்பட்ட செயற்திட்டத்தை கால ரீதியில் பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ஆ) காலி கட்டிட பிரிவின் மூலம் 2021 ஆம் ஆண்டில் நிறைவேற்றுவதற்கு திட்டமிடப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூபா 40,600,000 புதிய 07 முன்மொழிவு திட்டங்கள் 2022 ஆம் ஆண்டின் போது நிறைவேற்றுவதற்கு உத்தேசிக்கப்பட்ட புதிய 08 முன்மொழிவுகளும் நிதி ஏற்பாடு இல்லாமையின் அடிப்படையில் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. | இந்த சந்தர்ப்பத்தின் போது இதற்கு பதிலளிப்பதற்காக உரிய உபதிணைக்களத்தின் உறுதிப்படுத்தல்களை பெற்றுக்கொள்ளுதல் அவசியமாக இருந்தமையால் அதற்கான கால அளவு போதாதிருந்ததை தயவுடன் அறியத்தருகின்றோம். | திட்டமிடப்பட்ட பிரகாரம் குறித்த காலத்தில் பணிகள் பூர்த்தி செய்யப்படல் வேண்டும். |

### 3.6 வருடாந்த செயலாற்றல் அறிக்கை

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| 2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதிய 02/2020 ஆம் இலக்க அரச நிதி சுற்றறிக்கையின் 10.2 ஆம் பந்தியின் பிரகாரம் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகார சட்டத்தின் 16(2) ஆம் பிரிவின் பிரகாரம் வருடாந்த நிதிக் கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட வேண்டிய வருடாந்த செயலாற்றல் அறிக்கை நிதிக் கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த சந்தர்ப்பத்தின் போது இதற்கு பதிலளிப்பதற்காக உரிய உபதிணைக்களத்தின் உறுதிப்படுத்தல்களை பெற்றுக்கொள்ளுதல் அவசியமாக இருந்தமையால் அதற்கான கால அளவு போதாதிருந்ததை தயவுடன் அறியத்தருகின்றோம். | கணக்காய்வு அதிகார சட்டம் மற்றும் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3.7 வெளிநாட்டு உதவி செயற்திட்டங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) இந்திய கடன் வரிசை உடன்படிக்கையின் கீழான கடன் நிதி உதவின் பிரகாரம் மாஹோ-அநுராதபுரம் - ஓமந்தை வரை புகையிரத வீதி அபிவிருத்தி செய்யும் செயற்திட்டம் | | |
| (i) இந்திய எக்ஸிம் (Exim) வங்கியுடன் கைச்சாத்திடப்பட்ட கடன் உடன்படிக்கையின் நிபந்தனைகளின் கீழ் மாஹே - அநுராதபுரம் - ஓமந்தை வரை புகையிரத வீதிகள் 04 கட்டங்களில் கீழ் அமைப்பதற்காக இந்திய அரசின் கம்பனியில் இருந்த கூறு விலை கேரி 2019 நவம்பர் 29 ஆம் திகதி முதல் 36 மாதங்களில் பூர்த்தி செய்வதற்காக 2019 யூலை 18 ஆம் திகதி Ircon International Limnited நிறுவனத்துடன் அ. டொலர் 91,268,600 இற்கு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்தது. ஒப்பந்தகாரரால் 2022 நவம்பர் 28 ஆம் திகதி அளவில் இந்த செயற்திட்டம் பூர்த்தி செய்யப்பட வேண்டிய போதிலும், அத்திகதியில் செயற்திட்டத்தின் பௌதீக செயல் முன்னேற்றம் 35 சதவீதம் அளவான நலிவான மட்டத்தில் காணப்பட்டது. அநுராதபுரம் - வவுனியா மற்றும் வவுனியா – ஓமந்தை வீதிப் பகுதிகளை நிர்மாணித்தல் 2023 சனவரி முதல் மேற்கொள்ளப்படுவதுடன், அந்த பகுதியின் வேலைகள் மே மாதத்தில் பூர்த்தி | பதிலளிக்கப்படவில்லை. | செயற்திட்டத்தை செயற்திறனாக கட்டியெழுப்பும் வகையில் செயற்திட்டத்தின் எதிர்பார்க்கப்பட்ட பௌதீக மற்றும் நிதிசார் செயல் முன்னேற்றம் அடையப்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. 2023 பெப்ரவரி வரையிலும் மொத்த செயற்திட்டத்தின் பௌதீக செயல் முன்னேற்றம் 44 சதவீதம் மாத்திரம் ஆக இருந்ததுடன், மாஹோ - அநுராதபுர வீதி பகுதியின் நிர்மாணங்கள் இது வரை ஆரம்பிக்கப்படாமையினால் இந்த செயற்திட்டங்கள் 2023 ஆம் ஆண்டின் போதும் பூர்த்தி செய்வதற்கு முடியாத நிலைமை காணப்படுகின்ற அவதானிக்கப்பட்டது. | | |
| (ii) IV ஆம் கட்டம் (அநுராதபுரம் முதல் மிஹிந்தலை சந்தி வரையான பகுதி) | | |
| * செயற்திட்டத்தை ஆரம்பிப்பதற்கு முன் அநுராதபுரத்தில் இருந்து மிஹிந்தலை சந்தி வரையான புகையிரத வீதியில் புகையிரதம் ஓடுவதற்கு மிஹிந்தலை சந்தி முதல் மிஹிந்லை வரை தற்போது நிர்மாணிக்கப்பட்ட புகையிரத வீதிகளில் புகையிரதம் ஓடுகின்றது. அவ்வாறு இருக்கும் போது IV ஆம் கட்டத்தின் மூலம் அநுராதபுரத்தில் இருந்து மிஹிந்தலை சந்தியில் இருந்து 1.5 கிலோமீற்றர் அளவிற்காக பிரதான புகையிரத வீதிக்கு மேலதிகமாக வேறொரு புகையிரத வீதியினை நிர்மாணிப்பதற்காக US$ 672,784.74 இற்கு கேள்வி கையளிக்கப்பட்டிருந்தது. | பதிலளிக்கப்படவில்லை. | செயற்திட்டத்தில் அங்கீகரிப்பதற்கும், கேள்வினை கைளிப்பதற்கு முன்னர் அதன் பொருளாதார நலன்கள் மற்றும் பாதகங்கள் உரிய பிரகாரம் மதப்பீடு செய்யப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| * | அநுராதபுரத்தில் இருந்து மிஹிந்தலை வரை புகையிரதம் ஓடுதல் பொசன் காலத்தில் மாத்திரம் வருடத்திற்கு 03 தினம் அல்லது 04 நாட்கள் மேற்கொள்ளப்படுவதுடன், 2019 ஆம் ஆண்டின் பின்னர் புகையிரம் ஓடவில்லை. இதன் காரணமாக அநுராதபுரம் முதல் மிஹிந்தலை சந்தி வரை 1.5 கி.மீற்றர் தூர அளவு பிரதான வீதியின் புகையிரம் ஓடி மிஹிந்தலை சந்தியில் இருந்து மிஹிந்தலை வரை காணப்படுகின்ற புகையிரத வீதி பிரதான வீதிக்கு இணைக்கப்பட்டு மிஹிந்தலை வரை புகையிரதம் ஓடக் கூடியதாக இருக்கும் போது வருடத்திற்கு 03 நாட்கள் அல்லது 04 நாட்கள் புகையிரதம் ஓடுவதற்காக தனியான வீதியொன்றை நிர்மாணிப்பதற்காக இலங்கை அரசாங்கம் பெற்ற வெளிநாட்டு கடன் US$ 672,784 அதாவது ரூபா 222,018,720 (672,684x 330) இற்கு அதிக செலவினம் ஒன்றை செய்தல் கணக்காய்வின் போது பிரச்சினைக்குரியதாக இருந்தது. | பதிலளிக்கப்படவில்லை. | செயற்திட்டத்தை அங்கீகரிப்பதற்கு முன் அதன் பொருளாதார நலன்கள் பாதகங்கள் உரிய பிரகாரம் இனங்காண வேண்டியிருந்ததுடன், பெறப்பட்ட கடனை விட செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் மற்றும் பொருளாதார அர்த்தமுள்ள தேவைகளுக்கு செயற்திட்டத்தை ஈடுபடுத்துவதற்கு நிர்வாகம் கவனம் செலுத்துதல் வேண்டும். |
| (iii) | தற்போது புகையிரதம் தடம் புரளுதல் தொடர்ச்சியாக அறிக்கையிடப்படுவதுடன், இதன் மூலம் ஏற்படுகின்ற புகையிரத ஆதனங்களின் நட்டம் உயர்வடைந்திருந்தது. புதிய புகையிரத பாதைகளை நிர்மாணிக்கும் போது கலற்றி அகற்றப்பட்ட புகையிரத பீலிகள், மேலதிக பாகங்கள் மற்றும் Sleepers தற்போதும் புகையிர வீதிகளில் நலிவடைந்த நிலையில் காணப்படுகின்றது. ஏனைய இடங்களுக்கு விரைவாக அனுப்புவதன் தேவை | பதிலளிக்கப்படவில்லை. | பயன்பாட்டிற்கு எடுக்கக் கூடிய பொருட்களை ஈடுபடுத்தி அத்தியவசிய பராமரிப்பு நடவடிக்கைகளை விரைவாக நிறைவேற்றுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | முகாமைத்துவ கவனத்திற்கு உட்பட்டிருக்கவில்லை. | | |
| ரூ | செயற்திட்டத்தை அமுல்படுத்தியதன் காரணமாக கலற்றி அகற்றப்பட்ட ளுடநநிநசள மற்றும் ஏனைய பாகங்களின் கவனத்தில் கொள்ளக் கூடிய அளவில் பாதிப்பு ஏற்பட்டிருந்ததுடன், அந்த பொருட்களை மீண்டும் பாவனைக்கு எடுக்க முடியாத நிலைமைக்கு உட்பட்டிருந்தது. 10 -25 வருடங்களுக்கு இடையிலான காலம் காணப்படுகின்ற Sleepers ஆகக் குறைந்த காலத்தில் கழற்றி அகற்றுதல் ஆரம்பத்தில் காணப்பட்ட திட்டங்களுக்கு முரணாக எடுக்கப்பட்ட சிக்கனமற்ற தீர்மானமாக இருந்தமை அவதானிக்கப்பட்டதுடன், காணப்படுகின்ற புகையிரத வீதிக்கு சமாந்தரமாக புதிய புகையிரத வீதியொன்றை (இரட்டை வழியாக) அமைப்பதற்காக புதிய செயற்திட்டம் திட்டமிடப்படுமாயின் மிகவும் சிறந்த பெறுபேறாக இருக்கும் என கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. | பதிலளிக்கப்படவில்லை. | நிர்வாகத்தினால் எடுக்கப்பட்ட தீர்மானம், சமர்ப்பிக்கப்படுகின்ற திட்டத்தினை விட ஆக்கபூர்வமான மற்றும் அர்த்தமுள்ளதாக இருக்க வேண்டியதுடன், அது தொடர்பாக கவனம் செலுத்துதல் வேண்டும். |
| (iv) | புகையிரத போக்குவரத்தின் கவர்ச்சி, இலாபகரம், சுற்றாடலுக்கு சாதகமான பாதுகாப்பு போக்குவரத்து ஊடகத்தின் போது தற்போது எடுக்கப்பட்ட தீமானம், திட்டங்களை எதிர்கால இலக்கினை அடைந்து கொள்ளக் கூடிய முறையில் மேற்கொள்ள வேண்டியதுடன், நிலையான குறிகாட்டிகள் இன்றி செயற்திட்டம் (கொள்வனவு செய்தல்/ நிர்மாணித்தல்) திட்டங்களின் | பதிலளிக்கப்படவில்லை. | நிர்வாகத்தினால் எடுக்கப்பட்ட தீர்மானம், திட்டம் எதிர்காலத்தை அடைந்து கொள்ளக் கூடிய நிலையான இலக்கிற்காக இருத்தல் வேண்டும். |

மூலம் எதிர்கால இலக்கு கஷ்டமாக இருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | கொழும்பிற்கு அண்மித்த புகையிரத செயற்திட்டத்தின் கீழ் அமுல்படுத்தப்பட்ட புகையிரத வீதிகளை அபிவிருத்தி செய்வதற்காக சாத்திய வள ஆய்வுகளில் எதிர்வரும் 20 வருட காலத்தில் நிர்மாணிப்பதற்கு எதிர்பார்க்கப்பட்ட இலக்கினை உள்ளடக்கிய சாத்திய வள ஆய்வு அறிக்கை மற்றும் விரிவான திட்டம் 2021 ஆம் ஆண்டின் மார்ச் மாதம் பூர்த்தி செய்து புதிய வரிசை அமைச்சின் ஊடாக இலங்கை புகையிரத திணைக்களத்திற்கு வழங்கப்பட்டிருந்துது. இந்த சாத்திய வள ஆய்விற்காக ஆசிய அபிவிருத்தி வங்கி கடன் வசதியின் கீழ் ரூபா 1,446,952,381 தொகை செலவிடப்பட்டிருந்தது. அந்த கடனுக்கான கடன் தவணையான அ.டொலர் 275,000 வீதம் அரையாண்டிற்கு 2022 மார்ச் 15 ஆம் திகதி மற்றும் 2022 செப்டம்பர் 15 ஆம் திகதி கொடுப்பனவு செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. எனினும், குறித்த சாத்திய வள ஆய்வு மேற்கொண்டு உரிய திட்டத்தை அமுல்படுத்தும் போது ஏற்படுகின்ற தாக்கங்களை உரிய பிரகாரம் இனங்காணாமல் உரிய திட்டத்தை தயாரித்ததினால் மேற்கூறப்பட்ட சாத்திய வள ஆய்வை அமுல்படுத்தாது காணப்பட்டதுடன், அதற்காக செலவிடப்பட்ட பணம் பயனற்ற செலவினத்திற்கு உட்பட்டிருந்தது. | இந்த சந்தர்ப்பத்தின் போது இதற்கு பதிலளிப்பதற்காக உரிய உபதிணைக்களத்தின் உறுதிப்படுத்தல்களை பெற்றுக்கொள்ளுதல் அவசியமாக இருந்தமையால் அதற்கான கால அளவு போதாதிருந்ததை தயவுடன் அறியத்தருகின்றோம். | சாத்திய வள ஆய்வை அமுல்படுத்தி எதிர்பார்க்கப்பட்ட நலன்களை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | ஆசிய அபிவிருத்தி வங்கியின் மானியத்தில் (உடன்படிக்கை இலக்கம் TA 9382 – SRI OF 29-10-2017) இன் கீழ் கிடைத்த அ.டொலர் 1.5 மில்லியன் செலவில் புகையிரத திணைக்களத்திற்காக தயாரிக்கப்பட்ட பிரதான செயற்பாட்டு திட்டம். (Master Plan) அமுல்படுத்தும் போது ஏற்படுகின்ற இடையூறுகள் உரிய இனங்காணப்படாதிருந்தமையால் அந்த திட்டம் இது வரை அமுல்படுத்தப்படவில்லை. | இந்த சந்தர்ப்பத்தின் போது இதற்கு பதிலளிப்பதற்காக உரிய உபதிணைக்களத்தின் உறுதிப்படுத்தல்களை பெற்றுக்கொள்ளுதல் அவசியமாக இருந்தமையால் அதற்கான கால அளவு போதாதிருந்ததை தயவுடன் அறியத்தருகின்றோம். | செயற்பாட்டு திட்டத்தை அடுல்படுத்துவதன் மூலம் எதிர்பாாக்கப்பட்ட விளைவுகளை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.8 பெறுகைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | M4 – class Iocomotives இற்காக மேலதிக உதிரிப்பாகங்களை கொள்வனவு செய்யும் போது விடய இலக்கம் 06 இன கீழ் கொள்வனவு செய்யப்பட்ட Panel model 17FL11C1 for over speed protection & Transition Speed Event விடயம் பொருத்தமற்ற நிலையில் காணப்படுகின்றமை 2019 ஏப்ரல் 02 ஆம் திகதி வழங்குனருக்கு இரண்டாவது தடவை அறிவிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் இரண்டாவது தடவை நிராகரிக்கப்பட்ட இந்த விடயம் தொடர்பாக 2019 செப்டம்பர் 05 ஆம் திகதி | தற்போது பயன்படுத்தப்படுகின்ற கேள்வி ஆவணங்களில் பெறுகை வழிகாட்டிக் கோவை இணங்கும் வகையில் மற்றும் அதில் உள்ளடக்கப்பட்டுள்ள நிபந்தனைகள், கொடுப்பனவு நிபந்தனைகள் காப்புறுதி பெற்றுக் கொள்ளல் போன்ற விடயங்களை உள்ளடக்கும் வகையில் புதிய கேள்வி ஆவணம் தயாரிப்பதற்கும் இரு தரப்பினரும் பிரச்சினை இன்றிய பிரகாரம் முறையான உடன்படிக்கை படிவத்தை தயாரிப்பதற்கும் பதிவேடுகளை தயாரித்தல் தொடர்பாக பரிந்துரைகளை வழங்குவதற்கு தொழில்நுட்ப மதிப்பீட்டு | உடன்படிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்ததுடன், இவ்வாறான சந்தர்ப்பங்களுக்காக நிதி ஏற்பாட்டை வழுவான உடன்படிக்கையில் உள்ளடக்குதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மீண்டும் அறிவித்து அனுப்பப்பட்டிருந்ததுடன், ரூபா 1,202,864 (110.71 x 10,895) தொகையான இந்த பொருட்கள் 2022 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் வழங்கப்பட்டிருக்கவில்லை. | குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. அந்த குழுவினால் இது வரையில் உரிய கேள்வி ஆவணங்கள் வரைவு செய்யப்பட்டுள்ளதுடன், பெறுகைக் குழுவிற்கு சமர்ப்பித்து அங்கீகாரத்தை பெற்றதன் பின்னர் சேமிப்பு பெறுகை நடவடிக்கைகளின் போது பின்னர் எதிர்கால பெறுகை நடவடிக்கைளின் போது இந்த நிலைமை அநேகமான தூரம் குறைத்துக் கொள்ள முடியும். | |
| (ஆ) | M4 – Glass Locomotives இற்காக மேலதிக உதிரிப்பாகங்களை கொள்வனவு செய்யும் போது இரண்டாவது தடவை நிராகரிக்கப்பட்ட விடய இலக்கம் 06 தொடர்பாக உரிய நிறுவனத்திற்கு அறிவிக்கப்பட்ட சந்தர்ப்பம் வரையில் இந்த விடயத்தில் உத்தரவாத காலம் முடிவடைந்திருந்ததடன், 2022 திசெம்பர் 31 வரையிலும், அந்த நிறுவனத்தில் இருந்து இது தொடர்பாக எந்தவொரு பதிலும் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. | தற்போது பயன்படுத்தப்படுகின்ற கேள்வி ஆவணங்கள் பெறுகை வழிகாட்டிக் கோவையில் இணங்கும் வகையிலும் மற்றும் இதன் கீழ் உள்ளடக்கப்பட்டுள்ள நிபந்தனைகள், கொடுப்பனவு நிபந்தனைகள், காப்புறுதி பெற்றுக் கொள்ளல் போன்ற விடயங்கள் உள்ளடங்கும் வகையில் புதிய கேள்வி ஆவணங்களை தயாரிப்பதற்கும், இரு தரப்பினரும் பிரச்சினை இல்லாத வகையில் முறையான உடன்படிக்கை மாதிரிப் படிவத்தை தயாரிப்பதற்கும் ஆவண தயாரித்தல் தொடர்பான பரிந்துரையை பெற்றுக் கொள்வதற்கு தொழில்நுட்ப மதிப்பீட்டு குழு நியமிக்கப்பட்டுள்ளது. | இந்த நிறுவனத்திற்கு எதிராக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | M4 – Glass Locomotives இற்காக மேலதிக உதிரிப்பாகங்களை கொள்வனவு செய்தல் 2011 ஆம் ஆண்டில் | இந்த விடயம் M4 வகையின் எஞ்சினை பராமரிப்பதற்காக தேவையான உதிரிப்பாகமாக | சரியான தேவையின் அடிப்படையில் மாத்திரம் பொருட்கள் |

ஆரம்பிக்கப்பட்ட போதும் 2022 ஆம் ஆண்டு வரையிலும் உரிய பொருட்கள் கிடைக்காமையினால் பொருளின் தேவையை பூர்த்தி செய்து கொள்வதற்கு முடியாதிருந்ததுடன், இதன் மூலம் அத்தியவசியமற்ற பொருட்கள் கட்டளையிடப்பட்டிருந்தன.

இருந்ததுடன், RLJ 3158/16 இன் கீழ் ஒன்பது விடயங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததன் அந்த விடயங்கள் யாவும் தற்போது அத்தியவசியம் என்ற அடிப்படையில் களஞ்சியத்திற்கு பெறப்பட்டு பழுதுபார்த்தல் நடவடிக்கைகளுக்காக ஈடுபடுத்தப்பட்டுள்ளது. அதனால் இந்த விடயங்கள் அத்தியவசியமற்ற விடயம் அல்லாதிருந்ததுடன், தேவைகளை பூர்த்தி செய்து கொள்வதற்கு முடியாதிருந்த வழங்கல் விடயங்களின் வழுக்களுடன் இருந்தமை அதற்குரிய சரியான விடயம் வழங்குனரால் இது வரை மீண்டும் வழக்கப்படாமையினால் ஆகும்.

வழங்குனரால் தற்போது பொருட்கள் வழங்கப்படுவதுடன், அந்த மாதிரிகளில் வழுக்களுடன் உள்ளமையால் வழங்குனரால் மீண்டும் அந்த பொருட்களை வழங்குமாறு கோரப்பட்டுள்ளது. அவர்களினால் வழங்கப்பட்ட முதலாவது விடயத்தை மீண்டும் பெற்றுக் கொள்வதற்காக வங்கி உத்திரவாதம் (Bank gurantee) பெற்றுக் கொள்ள வேண்டியிருந்தமையும் அதனை வழங்கியத்ன பின்னர் அந்த விடயங்கள் வழங்கக் கூடியதாக இருந்ததாக உரிய வாடிக்கையளார் வழங்குனர் நிறுவனத்துடன் கலந்துரையாடி இணக்கப்பாடு பெறப்பட்டிருந்தது. மேலும். இரண்டாவது வழங்கப்பட்ட

கட்டளையிடப்படல் வேண்டும்.

| | | | |
|---|---|---|---|
| | | விடயம் வழங்குனர் நிறுவனத்திற்கு மீண்டும் வழங்குவதற்கு இணங்கியிருந்ததுடன், அந்த விடயத்திற்கு பதிலாக செயற்படு நிலையில் காணப்படுகின்ற விடயங்களை பெற்று அந்த நிறுவனம் இணங்கியிருந்தது. | |
| (ஈ) | புகையிரத மேடைகளை திருத்தி அமைப்பதற்காக மிகவும் விரைவான தேவையாக காண்பித்து கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்ட போதும், 2018 ஆம் ஆண்டு முதல் 2021 ஆம் ஆண்டு இறுதி வரையிலும், இந்த கொள்வனவுகள் 04 வருட காலத்தில் மேற்கொள்வதற்கு முடியாமை மற்றும் களஞ்சியங்களில் இருப்பு காணப்படாதிருந்தமை காண்பித்ததன் காரணமாக திருத்தியமைக்கும் நடவடிக்கைகள் இவ்வாறு மேற்கொள்ளப்பட்டது என கணக்காய்வில் பிரச்சினை எழுந்திருந்தமை மற்றும் விரைவாக துரித தேவையான காண்பித்து மிகவும் கணிசமான கொள்வனவுகளை செய்தவதற்கு அனுப்பட்டமை உள்ளபடியான தேவையின் பிரகாரம் மேற்கொள்ளப்பட்டதா என கணக்காய்வின் போது சர்ச்சைக்குரிய விடயமாக இருந்தது. | இந்த விடயம் M4 வகையின் எஞ்சினை பராமரிப்பதற்காக தேவையான உதிரிப்பாகமாக இருந்ததுடன், RLJ 3158/16 இன் கீழ் ஒன்பது விடயங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததன் அந்த விடயங்கள் யாவும் தற்போது அத்தியவசியம் என்ற அடிப்படையில் களஞ்சியத்திற்கு பெறப்பட்டு பழுதுபார்த்தல் நடவடிக்கைகளுக்காக ஈடுபடுத்தப்பட்டுள்ளது. அதனால் இந்த விடயங்கள் அத்தியவசியமற்ற விடயம் அல்லாதிருந்ததுடன், தேவைகளை பூர்த்தி செய்து கொள்வதற்கு முடியாதிருந்த வழங்கல் விடயங்களின் வழுக்களுடன் இருந்தமை அதற்குரிய சரியான விடயம் வழங்குனரால் இது வரை மீண்டும் வழக்கப்படாமையினால் ஆகும். | கொள்வனவு செய்தல் உள்ளபடியான தேவையின் பிரகாரம் மாத்திரம் மேற்கொள்ளப்படல் வேண்டும். |
| (உ) | RJFM/3432/17 இன் கீழ் கட்டளையிடப்பட்ட மேலதிக உதிரிப்பாகங்கள் | தற்போது நாணயக் கடிதம் திறத்தல் நிபந்தனையின் பிரகாரம் 100 சதவீத முழுத் தொகையும் செலுத்த | பெறுகைகளின் போது முக்கயமாக சகல நிபந்தனைகளையும் |

குறைவாக அனுப்பட்டமையும் அவற்றை மீண்டும் வழங்குமாறும், 2020 ஒக்டோபர் 19 ஆம் திகதி வழங்குனருக்கு அறிவிக்கப்பட்ட போதும் ரூபா 4,780,740 ஆன நிலுவையான உதிரிப்பாகங்களை வழங்குவதற்கோ அல்லது அதற்குரிய பணத்தை மீள செலுத்துவதற்கோ வழங்குனர் இது வரை கவனம் செலுத்திருக்கவில்லை. பணம் செலுத்தி 02 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் கடந்திருந்த போதிலும், பொருட்கள் குறைவாக வழங்கப்பட்டமை தொடர்பாக உடன்படிக்கையின நிபந்தனையில் உள்ளடங்காமை, நிறுத்தி வைக்கப்பட்ட பணத்தை வைக்காமை மற்றும் பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் செயலாற்றல் காப்புறுதி பெற்றுக் கொள்ளாமையின் காரணமாக பொருட்கள் குறைவாக வழங்கப்பட்டமை தொடர்பாக வழங்குனருக்கு எதிராக எந்தவொரு நடவடிக்கையும் நிறுவனத்திற்கு முடியாதிருந்தது. மேற்கூறப்பட்ட சகல விடயங்களினதும் பிரகாரம் வழங்கப்படாத பொருட்களுக்காக செலவிடப்பட்ட ரூபா 5,631,510 தொகை அரசாங்கத்திற்கு ஏற்பட்ட நட்டத்திற்கு உட்பட்டிருந்தது.

வேண்டும். எனினும், வழங்கப்படாத பொருட்கள் தொடர்பாக இனங்காணப்பட்ட சந்தர்ப்பங்களின் போது உரிய வழங்குனருக்கு அறிவித்து மீண்டும் பெற்றுக் கொள்வதற்கோ அல்லது பணத்தை மீளழப்பு செய்வதற்கோ நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. எனினும், இந்த நிலைமையை குறைத்துக் கொள்வதற்காக தற்போது பயன்படுத்தப்படுகின்ற கேள்வி ஆவணங்கள் பெறுகை வழிகாட்டிக் கோவைக்கு இணங்கும் வகையிலும் மற்றும் அதில் உள்ளடக்கப்பட்டுள்ள நிபந்தனைகள் கொடுப்பனவு நிபந்தனைகள் மற்றும் காப்புறுதியை பெற்றுக் கொள்ளல் போன்ற விடயங்களை உள்ளடக்கும் வகையில் புதிய கேள்வி ஆவணங்களை தயாரிப்பதற்கும் இரு தரப்பினரும் இணங்கும் வகையில் முறையான உடன்படிக்கை படிவம் ஒன்றை தயாரிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.

உடன்படிக்கை செய்ய வேண்டியிருந்ததுடன், பெறுகைகள் வழிகாட்டியின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். கொள்வனவு செயற்பாடுகளில் காணப்படுகின்ற நலிவுகள் உத்தியோகத்தரின் கவனம் இன்மை மற்றும் தாமத்தினால் ஏற்படுமாயின் ஏற்பட்ட நட்டத்திற்கான பெறுப்பு கடப்பாடுடைய உத்தியோகத்தருக்கு எதிராக நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

(ஊ) RWS/3367/15 இன் கீழ் கட்டளையிடப்பட்ட எனினும் வழங்கப்படாத நிலுவை பொருட்களை வழங்குமாறு 04 சந்தர்ப்பங்களின் போது வழங்குனருக்கு அறிவிக்கப்பட்டிருந்த போதிலும், கணக்காய்வு சந்தர்ப்பமான 2022 யூலை 15 ஆம் திகதி வரையிலும் ரூபா 3,697,022 ஆன நிலுவை பொருட்களை வழங்குவதற்கோ அல்லது அதற்குரிய பணத்தை மீள செலுத்துவதற்கோ வழங்குனர் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. பொருட்களை ஒரு பகுதி வழங்கி 03 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் கடந்திருந்த போதிலும், பொருட்கள் குறைவாக வழங்கிமை தொடர்பாக உடன்படிக்கை நிபந்தனையில் உள்ளடக்கப்படாமை மற்றும் பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் செயலாற்றல் காப்புறுதி பெற்றுக் கொள்ளாமையின் காரணமாக வழங்குனருக்கு எதிராக எந்தவொரு நடவடிக்கை எடுப்பதற்கு நிறுவனத்திற்கு முடியாதிருந்தது. மேறகூறப்பட்ட சகல விடயங்களினதும் பிரகாரம் இன்டன்ட் மூலம் கொள்வனவு செய்யும் செயற்பாட்டில் காணப்படுகின்ற நலிவுகள் மற்றும் உத்தியோகத்தரின் கவனம் இன்மை, தாமதத்தின் அடிப்படையில் வழங்கப்படாத பொருட்களுக்காக செலவிடப்பட்டட ரூபா 4,714,396 தொகை

தற்போது நாணயக் கடிதம் திறத்தல் நிபந்தனையின் பிரகாரம் 100 சதவீத முழுத் தொகையும் செலுத்த வேண்டும். எனினும், வழங்கப்படாத பொருட்கள் தொடர்பாக இனங்காணப்பட்ட சந்தர்ப்பங்களின் போது உரிய வழங்குனருக்கு அறிவித்து மீண்டும் பெற்றுக் கொள்வதற்கோ அல்லது பணத்தை மீளழப்பு செய்வதற்கோ நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. எனினும், இந்த நிலைமையை குறைத்துக் கொள்வதற்காக தற்போது பயன்படுத்தப்படுகின்ற கேள்வி ஆவணங்கள் பெறுகை வழிகாட்டிக் கோவைக்கு இணங்கும் வகையிலும் மற்றும் அதில் உள்ளடக்கப்பட்டுள்ள நிபந்தனைகள் கொடுப்பனவு நிபந்தனைகள் மற்றும் காப்புறுதியை பெற்றுக் கொள்ளல் போன்ற விடயங்களை உள்ளடக்கும் வகையில் புதிய கேள்வி ஆவணங்களை தயாரிப்பதற்கும் இரு தரப்பினரும் இணங்கும் வகையில் முறையான உடன்படிக்கை படிவம் ஒன்றை தயாரிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.

பெறுகைகளின் போது முக்கயமாக சகல நிபந்தனைகளையும் உடன்படிக்கை செய்ய வேண்டியிருந்ததுடன், பெறுகைகள் வழிகாட்டியின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். கொள்வனவு செயற்பாடுகளில் காணப்படுகின்ற நலிவுகள் உத்தியோகத்தரின் கவனம் இன்மை மற்றும் தாமத்தினால் ஏற்படுமாயின் ஏற்பட்ட நட்டத்திற்கான பெறுப்பு கடப்பாடுடைய உத்தியோகத்தருக்கு எதிராக நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

அரசாங்கத்திற்கு ஏற்பட்ட நட்டமாக இருந்தது.

## 3.9 சொத்துக்கள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | **வருடாந்த பொருள் மெய்மெய்யாய்வு** | | |
| (i) | கண்டி கட்டிட அலுவலகத்தில் 2022 சனவரி மாதம் 11 ஆம் திகதி பொருள் மெய்மெய்யாய்வு மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், அதன் போது 40 வகையான பொருட்கள் பயன்பாட்டிற்கு எடுக்க முடியாத பொருட்களாக பொது 47 படிவம் மூலம் நிதிப் பிரமாணம் 877 இன் பிரகாரம் பட்டியலிடப்பட்டிருந்த போதிலும், இந்த பொருட்கள் பொருட் பதிவேட்டில் இருந்து அகற்றுவதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த சந்தர்ப்பத்தின் போது இதற்கு பதிலளிப்பதற்காக உரிய உபதிணைக்களத்தின் உறுதிப்படுத்தல்களை பெற்றுக்கொள்ளுதல் அவசியமாக இருந்தமையால் அதற்கான கால அளவு போதாதிருந்ததை தயவுடன் அறியத்தருகின்றோம். | நிதிப் பிரமாணம் மற்றும் சுற்றறிக்கையின் ஆலோசனையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) | கண்டி கட்டிடத்தின் அலுவலகத்தில் 2019 ஆகஸ்ட் மாதம் 01 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட பொருள் மெய்மெய்யாய்வின் பிரகாரம் 88 விடயங்கள் பயன்பாட்டுக்கு பொருத்தமாக காண்பித்து விற்று தீர்ப்பதற்காக முன்மொழியப்பட்ட போதிலும், அது | இந்த சந்தர்ப்பத்தின் போது இதற்கு பதிலளிப்பதற்காக உரிய உபதிணைக்களத்தின் உறுதிப்படுத்தல்களை பெற்றுக்கொள்ளுதல் அவசியமாக இருந்தமையால் அதற்கான கால அளவு போதாதிருந்ததை தயவுடன் அறியத்தருகின்றோம். | நிதிப் பிரமாணம் மற்றும் சுற்றறிக்கையின் ஆலோசனையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

தொடர்பாக சரியான நடைமுறை பின்வற்றி அந்த பொருட்களை களஞ்சியத்தில் இருந்து அகற்றுவதற்காக இது வரையும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) **குறைவாக பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்.**

(i) மேற்பார்வை முகாமையாளர் காலி கட்டிட பிரிவின் மூலம் பராமரிப்பக்கப்படுகின்ற 165 உத்தியோகபூர்வ இல்லங்கள் காணப்பட்ட போதிலும், 48 வீடுகளில் குடியிருப்பதற்காக விண்ணப்பிக்கப்பட்டிருக்கவில்லை. உத்தியோகபூர்வ இல்லங்களில் குடியிருக்காமையினால் அவை உடைந்த நிலைக்கு உட்பட்டிருந்ததுடன், அதன் பிரகாரம் தொடர்ச்சியாக பராமரிப்பதற்காக கணிசமான கிரயம் ஒன்றை செலவிட வேண்டியிருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டதுடன், இந்த உத்தியோகபூர்வ இல்லங்களில் உரிய நபர்களை குடியமர்த்துவதற்கோ அல்லது அவ்வாறு இல்லையாயின் ஏனைய திணைக்களங்களின் தற்காலிகமான அடிப்படையிலேனும் வழங்குவதன் மூலம் ஏதாவது வருமானத்தை உழைத்துக் கொள்ளல் போன்ற நடவடிக்கைகள் தொடர்பிலோ நிர்வாகம் கவனம்

இந்த சந்தர்ப்பத்தின் போது இதற்கு பதிலளிப்பதற்காக உரிய உபதிணைக்களத்தின் உறுதிப்படுத்தல்களை பெற்றுக்கொள்ளுதல் அவசியமாக இருந்தமையால் அதற்கான கால அளவு போதாதிருந்ததை தயவுடன் அறியத்தருகின்றோம்.

சொத்துக்களின் மூலம் உரிய பயன்பாட்டை பெற்றுக் கொள்ள வேண்டியிருந்ததுடன், அதன் மூலம் வருமானத்தை உழைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

| | | | |
|---|---|---|---|
| | செலுத்தியிருக்கவில்லை. | | |
| (ii) | இலங்கை புகையிரத திணைக்களத்தின் SRS எரிபொருள் களஞ்சியத்தில் உராய்வு எண்ணை மற்றும் ஏனைய இருப்புக்களில் 21 விடயங்கள் பல வருட காலம் முதல் பயன்பாட்டிற்கு எடுக்கப்படாமல் களஞ்சியத்தில் வைக்கப்பட்டிருந்ததுடன், அது பயன்பாட்டிற்கு எடுக்க முடியாத நிலைமைக்கும் உட்பட்டிருந்தது. | தற்போது து.சா. இன் து.சா/சம்/05/02/19/2021 ஆம் இலக்க 2021.02.22 ஆம் திகதிய கடிதம் மூலம் இலக்க 1, 2, 3, 4, 6, 7, 8, 18, 19, 20, 21 என்ற விடயங்கள் உலக மற்றும் இரசாயன ஆய்வு கூடத்தின் பரிந்துரையின் அடிப்படையில் கேள்வி மூலம் விற்பனை செய்யுமாறு பரிந்துரை கிடைத்துள்ளது. அதன் பிரகாரம் எதிர்வரும் கேள்வி உள்ளடக்கி அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத்தருகின்றோம். மேற்கூறப்பட்ட விடயங்கள் தொடர்பாக பயன்படுத்தப்படுகின்ற உப திணைக்களங்களிடம் விசாரணை செய்து காலாவதியாவதற்கு முன்னர் பயன்பாட்டிற்கு எடுத்தல் மீண்டும் கட்டளை இடும் மட்டத்தை மீண்டும் கவனத்தில் கொள்வதற்கும் நடவடிக்கை எடுப்படும் என அறியத்தருகின்றோம். | கொள்வனவு செய்யப்பட்ட இருப்புக்கள் பயன்படுத்தப்படல் வேண்டும். |
| (iii) | வவுனியா அதிகார பிரதேசத்திற்குரிய 140 உத்தியோகபூர்வ இல்லங்களில் 54 உத்தியோகபூர்வ இல்லங்களில் மாத்திரம் உத்தியோகத்தர்கள் குடியிருந்து வருகின்றமை அவதானிக்கப்பட்டதுடன், ஏனைய உத்தியோகபூர்வ இல்லங்களை திருத்தி அமைக்க வேண்டிய மட்டத்தில் மற்றும் மிகவும் உடைந்த நிலையில் காணப்பட்டமையும் | பதிலளிக்கப்படவில்லை. | சொத்துக்கள் பயன்படுத்தல் மிகவும் செயற்திறனாக இருத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அவதானிக்கப்பட்டது. சில உத்தியோகபூர்வ இல்லங்களில் ஜன்னல், கதவுகள் கள்வர்களினால் களவாடப்பட்டிருந்தது. | | |
| (iv) | சீனாவில் இருந்து கொண்டுவரப்பட்ட 100 பயணிகள் புகையிரதம் இது வரை ஓட்டத்தில் ஈடுபடுத்தப்பட்ட புகையிரத பெட்டிகளின் எண்ணிக்கை 17 ஆக இருந்ததுடன், ஏனைய புகையிரத பெட்டிகள் மாளிகாவத்தை, இரத்மலான தளங்களில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்ததுடன், மேலும் சில புகையிரத பெட்டிகள் புத்தளம் புகையிரத நிலையத்தில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. | தற்போது சீனாவின் 100 புகையிரத பெட்டிகள் தொடர்பான நிலைமை பின்வருமாறு.<br><br>* ஓட்டத்தில் காணப்படுகின்ற எண்ணிக்கை - 19 (புகையிரத தொகுதிகள் 02)<br><br>* ஓட்டத்திற்கு தயார் செய்யப்பட்டுள்ள எண்ணிக்கை - 06<br><br>* பழுதுபார்ப்பதற்கு அனுப்புவதற்காக மாளிகாவத்தை தளத்தில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள எண்ணிக்கை - 40<br><br>* மாளிகாவத்தை தளத்தில் பழுதுபார்த்தல் மேற்கொள்ளப்படுகின்ற எண்ணிக்கை - 02<br><br>* பழுதுபார்ப்பதற்கு இரத்மலானை தொழிற்சாலைக்கு அனுப்பப்பட்டுள்ள எண்ணிக்கை - 32<br><br>* விபத்திற்கு உட்பட்டமையினால் ஓட்டத்தில் இருந்து அகற்றப்பட்ட எண்ணிக்கை - 01<br><br>புத்தளம் புகையிரத நிலையத்தில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள புகையிரத பெட்டிகளை பழுதுபார்ப்பதற்கு இரத்மலானை வேலைத் தளத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. இரத்மலானை வேலை | கொள்வனவு செய்யப்பட்ட பிரயாணிகள் புகையிரத தொகுதிகள் யாவும் ஓட்டத்தில் ஈடுபடுத்தப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | தளத்திற்கு பழுதுபார்க்கும் வரை நிறுத்தி வைப்பதற்கு இடமொன்று இல்லாமையினால் தற்காலிகமாக புத்தளம் புகையிரத நிலையத்தில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. மாளிகாவத்தை தளத்தை விரிவுபடுத்தி புகையிரத தொகுதிகளை நிறுத்தி வைப்பதற்கு முடியுமாக இல்லாத வகையில் மாளிகாவத்தை தளத்திற்குரிய புகையிரத காணியில் ஒரு பகுதி முறையற்றதாக வெளித்தரப்பினருக்கு கையளிக்கப்பட்டிருந்தது. அந்த காணியை விடுவித்து புகையிரத பெட்டிகளை நிறுத்தி வைக்கக் கூடிய வகையில் தளமொன்றை விரிவுபடுத்துவதில் தாமதம் ஏற்பட்டமையால், புத்தளம், அநுராதபுரம், கல்ஓய போன்ற வெளி இடங்களில் பழுதுபார்ப்பதற்கு குறித்துரைத்த மாதிரி புகையிர பெட்டிகள் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. | |
| (v) | கண்டி மேற்பார்வை முகாமையாளர் (கட்டிடம்) அலுவலகத்தில் 272 உத்தியோகபூர்வ இல்லங்கள் பராமரிக்கப்படுவதுடன், அதில் குடியிருப்பதற்காக தற்போது பயன்படுத்தப்படாத உத்தியோகபூர்வ இல்லங்களின் எண்ணிக்கை 96 ஆகும். | இந்த சந்தர்ப்பத்தின் போது இதற்கு பதிலளிப்பதற்காக உரிய உபதிணைக்களத்தின் உறுதிப்படுத்தல்களை பெற்றுக்கொள்ளுதல் அவசியமாக இருந்தமையால் அதற்கான கால அளவு போதாதிருந்ததை தயவுடன் அறியத்தருகின்றோம். | சொத்துக்களில் அதிகூடிய பயன்பாட்டை பெறுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (vi) | வெவ்றுகன்னல இல் நிர்மாணிக்கப்பட்ட பெரிய அளவிலனா 07 அரைகளை உடைய | இந்த சந்தர்ப்பத்தின் போது இதற்கு பதிலளிப்பதற்காக உரிய உபதிணைக்களத்தின் உறுதிப்படுத்தல்களை | பயன்பாட்டிற்கு எடுக்கக் கூடிய நிலைமைக்கு உட்படுத்தி அதில் |

| | | | |
|---|---|---|---|
| | சுற்றுலா விடுதி 2019 ஆம் ஆண்டில் இருந்த பயனற்று காணப்படுவதுடன், பாதுகாவலரை ஈடுபத்தி அதற்கு பாதுகாப்பு வழங்குதலும் கட்டிடம் மற்றும் அறைகள் யாவும் அழுக்கடைந்தும் காணப்பட்டது. | பெற்றுக்கொள்ளுதல் அவசியமாக இருந்தமையால் அதற்கான கால அளவு போதாதிருந்ததை தயவுடன் அறியத்தருகின்றோம். | பொருளாதார நலன்களை பெறல் வேண்டும். |
| (vii) | கெக்கணதுர மற்றும் பெலிஅத்த பல்நோக்கு கட்டிடங்களில் உள்ள நவீன கடைகளுக்காக பயன்படுத்தக் கூடிய முறையே 2637 மற்றும் 1730 சதுர அடி அளவான கட்டிடம் 2019 ஆம் ஆண்டு முதல் பயனற்று காணப்படுவதுடன், அந்த கட்டிடம் வெளித்தரப்பினரால் பல்வேறு சமூக விரோத செயற்பாடுகளுக்கு பயன்படுத்தப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது. மேலும், அந்த கட்டிடத்தில் காடுகள் வளர்ந்து அழுக்கடைந்து இருந்தது. | இந்த சந்தர்ப்பத்தின் போது இதற்கு பதிலளிப்பதற்காக உரிய உபதிணைக்களத்தின் உறுதிப்படுத்தல்களை பெற்றுக்கொள்ளுதல் அவசியமாக இருந்தமையால் அதற்கான கால அளவு போதாதிருந்ததை தயவுடன் அறியத்தருகின்றோம். | பயன்பாட்டிற்கு எடுக்கக் கூடிய நிலைமைக்கு உட்படுத்தி அதில் பொருளாதார நலன்களை பெறல் வேண்டும். |
| (இ) | **காணிகளை வாடகைக்கு வழங்குதல்** | | |
| (i) | இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் விற்பனை முகவர் ஒருவருக்கு வாழைச்சேனை பிரதான வீதியில் இலக்கம் LA/01/16 இன் படி வழங்கப்பட்ட 20.6 பேர்ச் புகையிரத ஒதுக்கப் பிரதேசம் 2013 ஆகஸ்ட் 31 ஆம் திகதி முதல் வாடகை வழங்குமாறு புகையிரத திணைக்களத்தால் கோரிக்கைவிடப்பட்டிருந்தது. இதற்காக 2016 பெப்ரவரி | இந்த சந்தர்ப்பத்தின் போது இதற்கு பதிலளிப்பதற்காக உரிய உபதிணைக்களத்தின் உறுதிப்படுத்தல்களை பெற்றுக்கொள்ளுதல் அவசியமாக இருந்தமையால் அதற்கான கால அளவு போதாதிருந்ததை தயவுடன் அறியத்தருகின்றோம். | முறையான பிரகாரம் உடன்படிக்கை செய்து வாடகைக்கு வழங்குதல் மேற்கொள்ள வேண்டியிருந்ததுடன், அனுமதியற்ற பயன்பாடுகள் தொடர்பாக சட்ட ரீதியான நடவடிக்கைகளோ அல்லது பயன்பாட்டு |

| | | | |
|---|---|---|---|
| | 07 ஆம் திகதி புகையிரத பொது முகாமையாளரால் அங்கீகாரம் வழங்கப்பட்ட போதும், 2022 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் அந்த காணியின் வாடகை பெறப்படாதிருந்ததுடன், காணியை பயன்படுத்துதல் தொடர்பான கட்டணம் ரூபா 1,420,975 இனை அறவிடுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | கட்டணமோ அறவிடுதல் வேண்டும். |
| (ii) | புகையிரத திணைக்களத்திற்கு சொந்தமாக காணப்படுகின்ற ஒதுக்க பிரதேச காணிகள் வெளி நபர்களினால் அனுமதியற்ற வகையில் கைப்பற்றியிருந்தமை அவதானிக்கப்பட்டதுடன், ''புகையிரத ஒதுக்க பிரதேசம் தொடர்பாக கோவை விபர ஆவணங்களை'' பரீட்சிக்கும் போது வடக்கு புகையிரத வீதிக்குரிய காணிகள் அனுமதியற்ற வகையில் பிடித்து வைக்கப்பட்டிருந்த 39 சந்தர்ப்பங்கள் காணப்பட்டன. | இந்த சந்தர்ப்பத்தின் போது இதற்கு பதிலளிப்பதற்காக உரிய உபதிணைக்களத்தின் உறுதிப்படுத்தல்களை பெற்றுக்கொள்ளுதல் அவசியமாக இருந்தமையால் அதற்கான கால அளவு போதாதிருந்ததை தயவுடன் அறியத்தருகின்றோம். | சட்ட விதிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (iii) | 2018, 2019 ஆம் ஆண்டுகளின் போது இந்த புகையிரத ஒதுக்க காணிகளில் ஒரு பகுதி வருட பிறப்பு சமயத்தின் போது தற்காலிகமாக வாடகைக்கு வழங்கப்பட்ட நடமாடும் கடைகளில் இருந்து ரூபா 06 இலட்சம் வருமானம் பெறப்பட்டிருந்தமையும், ஆவணங்களின் பரீட்சிப்பின் | இந்த சந்தர்ப்பத்தின் போது இதற்கு பதிலளிப்பதற்காக உரிய உபதிணைக்களத்தின் உறுதிப்படுத்தல்களை பெற்றுக்கொள்ளுதல் அவசியமாக இருந்தமையால் அதற்கான கால அளவு போதாதிருந்ததை தயவுடன் அறியத்தருகின்றோம். | புகையிரத ஒதுக்க பிரதேசத்தை முறையான பிரகாரம் வாடகைக்கு வழங்கி வருமானம் அறவிடப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | போது அவதானிக்கப்பட்டதுடன், தற்போது அவ்வாறான முறையான திட்டமொன்றை பின்பற்றாமையின் மூலம் அனுமதி அற்ற வியாபாரிகள் புகையிரத ஒதுக்கப்பிரதேசத்தில் தமது வியாபார நடவடிக்கைகளுக்காக கொடுப்பனவுகள் செலுத்தாமல் பயன்படுத்துகின்றனர். | | |
| (iv) | யாழ்ப்பாணம் புகையிரத நிலையத்திற்கு அருகில் உள்ள மேற்பார்வை முகாமையாளர் வீதி மற்றும் வேலை அலுவலகத்திற்கு அருகில் ஆரம்பித்து வைத்தியசாலை வீதி, கடற்கரை வீதி, கண்டி வீதி ஊடாக யாழ்ப்பானம் இறங்குதுரை புகையிரத வீதியொன்று காணப்பட்டிருந்ததுடன், அந்த புகையிரத வீதி மற்றும் அதற்குரிய ஒதுக்க காணி யாவும் பிரதேச வாசிகளினால் கைப்பற்றப்பட்ட 20 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் உரிமை கோராடப்பட்டிருந்தது. இது தொடர்பாக பொறுப்பு வாய்ந்த புகையிரத அதிகார தரப்பினர் எந்தவொரு நடவடிக்கையும் எடுக்காமையினால் இந்த ஆதனங்கள் பயன்படுத்தப்படாத நிலைக்கு உட்பட்டிருந்தது. | இந்த சந்தர்ப்பத்தின் போது இதற்கு பதிலளிப்பதற்காக உரிய உபதிணைக்களத்தின் உறுதிப்படுத்தல்களை பெற்றுக்கொள்ளுதல் அவசியமாக இருந்தமையால் அதற்கான கால அளவு போதாதிருந்ததை தயவுடன் அறியத்தருகின்றோம். | புகையிரத ஒதுக்க பிரதேசங்களை முறையான பிரகாரம் வாடகைக்கு வழங்கி வருமானம் அறவிடப்படல் வேண்டும். |

(ஈ) **விளைவற்ற சொத்துக்கள்**

| | | | |
|---|---|---|---|
| (i) | குருநாகல் புகையிரத நிலையத்தில் கணனி இயந்திரம் மூலம் ஆசனம் ஒதுக்கி பிரயாணச் சீட்டு விநியோகிக்கப்பட்ட ரூபா 42,680,625 பெறுமதியான அச்சிடப்பட்ட 108,133 பயணச் சீட்டுக்கள் பயன்பாட்டில் இருந்து அகற்றப்பட்டிருந்தது. | இந்த சந்தர்ப்பத்தின் போது இதற்கு பதிலளிப்பதற்காக உரிய உபதிணைக்களத்தின் உறுதிப்படுத்தல்களை பெற்றுக்கொள்ளுதல் அவசியமாக இருந்தமையால் அதற்கான கால அளவு போதாதிருந்ததை தயவுடன் அறியத்தருகின்றோம். | பயன்பாட்டிற்கு எடுக்கப்படாத இருப்புக்கள் அகற்றப்படல் வேண்டும். |
| (ii) | இலங்கை புகையிரத திணைக்களத்தின் பிரதான அலுவலகத்திற்கு அனுப்ப வேண்டியவ விற்பனை செய்யப்படாத ரூபா 7,949,590 பெறுமதியான 35,602 புகையிரத அனுமதிச் சீட்டுக்கள் கம்பஹா, கனேவத்தை, குருநாகல், அப்பேபுஸ்ஸ என்ற புகையிரத நிலையங்களில் காணப்பட்டதுடன், அது தொடர்பாக மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த சந்தர்ப்பத்தின் போது இதற்கு பதிலளிப்பதற்காக உரிய உபதிணைக்களத்தின் உறுதிப்படுத்தல்களை பெற்றுக்கொள்ளுதல் அவசியமாக இருந்தமையால் அதற்கான கால அளவு போதாதிருந்ததை தயவுடன் அறியத்தருகின்றோம். | பயன்பாட்டிற்கு எடுக்கப்படாத இருப்புக்கள் அகற்றப்படல் வேண்டும். |
| (iii) | மேல் மாவட்டங்களில் நானோயா நிரந்தர வீதி அதிகார பிரதேசத்தில் நானோயா வீதிப் பிரிவில் அருகில் உள்ள புகையிரத தண்டவாளங்களில் பொருத்தப்பட்ட வளைவுக்கு அருகாமையில் 805 சங்கிலிகள் அளவில் இருந்ததுடன், அதில் 382 சங்கிலிகள் அளவில் புகையிரத தண்டவாளங்களால் அமைக்கப்பட்ட உப தண்டவாளங்களாக இருந்ததுடன், மிகுதி 423 | இந்த சந்தர்ப்பத்தின் போது இதற்கு பதிலளிப்பதற்காக உரிய உபதிணைக்களத்தின் உறுதிப்படுத்தல்களை பெற்றுக்கொள்ளுதல் அவசியமாக இருந்தமையால் அதற்கான கால அளவு போதாதிருந்ததை தயவுடன் அறியத்தருகின்றோம். | குறித்துரைத்த காலங்களின் போது பழுதுபார்த்தல் மேற்கொள்ள வேண்டியிருந்ததுடன், அகற்றுதல்களை முறையான பிரகாரம் மேற்கொள்ளுதல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| சங்கிலிகளும் இறக்குமதி செய்யப்பட்ட (Bulb Angle Checkrail) குமிழ் வளைவு தண்டவாளங்கள் ஆகும். இந்த பிரிவில் உள்ள இறக்குமதி செய்யப்பட்ட சகல தண்டவாளங்களினதும் உற்பத்தி ஆண்டு 1900 இற்கும் 1910 இற்கும் இடையிலாக இருந்ததுடன், இவை யாவும் தற்போது சேதமடைந்து பயன்பாட்டிற்கு பொருத்தமற்ற நிலையில் காணப்பட்டது. | | |

(உ) **வாகன கட்டுப்பாடு**

| | | |
|---|---|---|
| புகையிரத திணைக்களத்திற்குரிய 08 வாகனங்கள் விபத்துக்கு உட்பட்டு செயலிழந்து இருந்ததுடன், அவை தொடர்பாக நிதிப் பிரமாணம் 104 இன் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | இந்த சந்தர்ப்பத்தின் போது இதற்கு பதிலளிப்பதற்காக உரிய உபதிணைக்களத்தின் உறுதிப்படுத்தல்களை பெற்றுக்கொள்ளுதல் அவசியமாக இருந்தமையால் அதற்கான கால அளவு போதாதிருந்ததை தயவுடன் அறியத்தருகின்றோம். | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3.10 நட்டம் மற்றும் இழப்புக்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) இணையவழி முறைமையின் ஊடாக ஆசனங்களை ஒதுக்கும் முறைமையை நாளதுவரையாக்குதல் ஒரு உத்தியோகத்தருக்கு கையளித்தமையின் காரணமாக 2022 மார்ச் 24 ஆம் திகதி இலக்கம் 1029/1030 என்ற புகையிரதத்தில் ஏற்பட்ட மாற்றம், நாளது வரையாக்குவதற்கு 03 நாட்கள் | இந்த சந்தர்ப்பத்தின் போது இதற்கு பதிலளிப்பதற்காக உரிய உபதிணைக்களத்தின் உறுதிப்படுத்தல்களை பெற்றுக்கொள்ளுதல் அவசியமாக இருந்தமையால் அதற்கான கால அளவு போதாதிருந்ததை தயவுடன் அறியத்தருகின்றோம். | சந்தர்ப்ப சூழ்நிலைகளின் பிரகாரம் முறையான படி அதிகாரங்கள் கையளிக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கடந்திருந்தமையும் அதனை உடனடியாக நாளது வரையாக்குவதற்கு முடியாமையினால் ரூபா 464,650 நிதி நட்டம் அரசாங்கத்திற்கு ஏற்பட்டிருந்தது. | | |
| (ஆ) | இழப்பு நட்ட பதிவேடுகளில் உள்ளடக்கப்பட்ட பெறுமதி ரூபா 1,933,381 ஆன இழப்பு மற்றும் நட்டம், நட்டம் மற்றும் கைவிடல்கள் தொடர்பான கூற்றில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த சந்தர்ப்பத்தின் போது இதற்கு பதிலளிப்பதற்காக உரிய உபதிணைக்களத்தின் உறுதிப்படுத்தல்களை பெற்றுக்கொள்ளுதல் அவசியமாக இருந்தமையால் அதற்கான கால அளவு போதாதிருந்ததை தயவுடன் அறியத்தருகின்றோம். | சகல இழப்பு மற்றும் நட்டங்களும் பதிவேட்டில் உள்ளடக்குதல் வேண்டும். |

## 3.11 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| நாஓயா நிலையான வீதி அதிகார பிரதேசத்தில் அனுமதியற்ற நிர்மாணங்கள் மற்றும் 12 கைப்பற்றல்கள் அறிக்கையிடப்பட்டிருந்ததுடன், அந்த அனுமதியற்ற நிர்மாணங்களை அகற்றுவதற்கும் மற்றும் அந்த நிலத்தில் அரைவாசி புகையிரத திணைக்களத்திற்கு கையளிப்பதற்கும் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த சந்தர்ப்பத்தின் போது இதற்கு பதிலளிப்பதற்காக உரிய உபதிணைக்களத்தின் உறுதிப்படுத்தல்களை பெற்றுக்கொள்ளுதல் அவசியமாக இருந்தமையால் அதற்கான கால அளவு போதாதிருந்ததை தயவுடன் அறியத்தருகின்றோம். | அனுமதியற்ற பயன்பாடுகளை தவிர்த்து முறையான பிரகாரம் கையேற்றல் வேண்டும். |

### 3.12 கணக்காய்வு ஐயவினாக்களுக்கு பதிலளிக்கப்படாமை

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| 2022 கொடுக்கல் வாங்கலை பரீட்சிப்பதற்காக விநியோகிக்கப்பட்ட 21 கணக்காய்வு ஐயவினாக்களுக்காக இதுவரை பதிலளிக்கப்பட்டிருக்கவில்லை. | 2022 ஆம் ஆண்டில் கணக்காய்ளர் தலைமை அதிபதியின் 67 ஐயவினாக்கள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. 2022.12.31 ஆம் திகதி வரையில் அதில் 43 இற்காக பதிலளிக்கப்பட்டுள்ளது. மிகுதி 24 ஆகும். அதில் 2023 ஏப்ரல் மாத இறுதி வரையில் 20 ஐயவினாக்களுக்காக பதில் சமர்ப்பிப்பதற்கு எஞ்சியிருந்தது. அதற்காக விரைவாக பதிலளிப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது என அறியத்தருகின்றோம். | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் 21 நாட்களுக்குள் கணக்காய்வு ஐயவினாக்களுக்காக பதிலளித்தல் வேண்டும். |

### 3.13 முகாமைத்துவ நலிவுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) பொருள் உரிய நியமத்துடனும் மற்றும் சரியான அளவில் கிடைத்தமைக்கு கொடுப்பனவை உறுதிப்படுத்துகின்ற உத்தியோகத்தரால் உறுதிப்படுத்தியதன் பின்னர் உரிய கொடுப்பனவுகளுக்காக அங்கீகாரம் வழங்க | இந்த நிலைமையை குறைத்துக் கொள்வதற்காக தற்போது பயன்படுத்தப்படுகின்ற கேள்வி ஆவணங்களில் பெறுகை வழிகாட்டிக் கோவைக்கு இணங்கும் வகையிலும், அதில் உள்ளடக்கப்பட்டுள்ள நிபந்தனைகள், கொடுப்பனவு நிபந்தனைகள் | முறையான பிரகாரம் உறுதிப்படுத்துதல் அங்கீகாரத்தின் கீழ் மாத்திரம் கொடுக்கல் வாங்கல் மேற்கொள்ளப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வேண்டிய போதிலும், அவ்வாறு உறுதிப்படுத்தல் இன்றி நாணயக் கடிதத்தின் மொத்த பெறுமதியும் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த போதிலும், ஒப்பந்த தொகையில் 63 சதவீத பெறுமதி பொருட்கள் தகுதியற்ற நிலையில் காணப்பட்டமை மற்றும் மீண்டும் அறிவட முடியாத முறையில் பொறுப்பு காலம் உத்தரவு காலம் விஞ்சியிருந்தது. | காப்புறுதியை பெற்றுக் கொள்ளல் போன்ற விடயங்களை உள்ளடக்கும் வகையில் புதிய கேள்வி ஆவணங்களைத் தயாரிப்பதற்கும், இருதரப்பினரும் நிபந்தனைகள் இன்றி முறையான பிரகாரம் உடன்படிக்கை படிவமொன்றைத் தயாரிப்பதற்கும் ஆவணங்கள் தயாரித்தல் தொடர்பாக பரிந்துரைகளை வழங்குவதற்கும் தொழில்நுட்ப குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. அந்த குழுவினால் தற்போது உரிய கேள்வி ஆவணங்கள் வரைவு செய்யப்பட்டுள்ளதுடன் பெறுகைகள் குழுவிற்கு சமர்ப்பித்து அங்கீகாரம் பெற்றுக்கொண்டதன் பின்னர் எதிர்வரும் பெறுகை நடவடிக்கைகளின் போது இந்த நிலைமையை அனேகமாக குறைத்துக்கொள்ள முடியும் என அறித்தருகின்றோம். | |
| (ஆ) | கனேவத்தை புகையிரத நிலையத்தின் பிரதான கட்டிடம் பயன்படுத்த முடியாதவாறு அதிக அளவில் உடைந்து காணப்பட்டதுடன், அது பாவனையில் இருந்து நீக்கப்பட்டது. | இந்த சந்தர்ப்பத்தின் போது இதற்கு பதிலளிப்பதற்காக உரிய உபதிணைக்களத்தின் உறுதிப்படுத்தல்களை பெற்றுக்கொள்ளுதல் அவசியமாக இருந்தமையால் அதற்கான கால அளவு போதாதிருந்ததை தயவுடன் அறியத்தருகின்றோம். | நாளாந்த நடவடிக்கைகளை உரிய பிரகாரம் நடாத்திச் செல்வதற்கு தேவையான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். |
| (இ) | Rails மற்றும் Dog Spikes என்ற பொருள் கனேவத்தை நிலையான வீதி பரிசோனை அலுவலக வலவில் காணப்பட்டிருந்தமை | இந்த சந்தர்ப்பத்தின் போது இதற்கு பதிலளிப்பதற்காக உரிய உபதிணைக்களத்தின் உறுதிப்படுத்தல்களை பெற்றுக்கொள்ளுதல் அவசியமாக | நிதிப் பிரமாணம் மற்றும் சுற்றறிக்கையின் பிராகரம் விற்று தீர்த்து வருமானத்தை |

| | | | |
|---|---|---|---|
| | அவதானிக்கப்பட்டிருந்ததுடன், இந்த பொருட்கள் தற்போதைய சந்தையில் காணப்படுகின்ற கோரிக்கையின் பிரகாரம் உடைந்த இருப்புகளாக அல்லது வழங்குதல் தொடர்பில் நிர்வாகத்தின் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. இந்த பொருட்கள் முறையான திட்ட முறைமையின் படி விற்பனை செய்வதற்கு முடியுமாயின் ரூபா 14,788,800 வருமானம் ஒன்றை பெறக் கூடியதாக இருந்தமை அவதானிக்கப்பட்டது. | இருந்தமையால் அதற்கான கால அளவு போதாதிருந்ததை தயவுடன் அறியத்தருகின்றோம். | பெற்றுக் கொள்ளல் வேண்டும். |
| (ஈ) | 05 புகையிரத நிலையங்களுக்குரிய No Debits (வரவு இன்றி செலவு) பதிவேடுகளில் நீண்ட காலமாக காணப்படுகின்ற ரூபா 2,895,900 மீதியொன்று அரசாங்கத்தின் வருமானத்திற்கு எடுப்பதற்கோ அல்லது அதனை தீர்த்து வைப்பதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த சந்தர்ப்பத்தின் போது இதற்கு பதிலளிப்பதற்காக உரிய உபதிணைக்களத்தின் உறுதிப்படுத்தல்களை பெற்றுக்கொள்ளுதல் அவசியமாக இருந்தமையால் அதற்கான கால அளவு போதாதிருந்ததை தயவுடன் அறியத்தருகின்றோம். | நீண்ட காலமாக காணப்படுகின்ற மீதி தீர்த்து வைக்கப்படல் வேண்டும். |
| (உ) | இலங்கை புகையிரத திணைக்களத்தின் பிரதான அலுவலகத்திற்கு அனுப்ப வேண்டிய மெதுவாக விற்பனையாகின்ற ரூபா 2,367,040 பெறுமதியான புகையிரத சீட்டுக்கள் 7497 அம்பேபுஸ்ஸ புகையிரத நிலையத்தில் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது. | இந்த சந்தர்ப்பத்தின் போது இதற்கு பதிலளிப்பதற்காக உரிய உபதிணைக்களத்தின் உறுதிப்படுத்தல்களை பெற்றுக்கொள்ளுதல் அவசியமாக இருந்தமையால் அதற்கான கால அளவு போதாதிருந்ததை தயவுடன் அறியத்தருகின்றோம். | தலைமை அலுவலகத்திற்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஊ) | பொருட்களை இறக்குமதி செய்யும் போது விடுவிக்கும் நடவடிக்கைகளை செயற்திறனாகவும் விரைவாகவும் நிறைவேற்றாமையின் அடிப்படையில் வருடாந்தம் கணிசமான தொகையொன்று தாமதக் கட்டணம் வட்டியாக செலுத்த வேண்டி ஏற்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டில் அவ்வாறு செலுத்தப்பட்டுள்ள தொகை ரூபா 5,044,787 ஆகும். தாமதக் கட்டணம் மற்றும் வட்டி செலுத்துதல் நிறுவனத்தின் பொதுவான நடவடிக்கைக்கு உட்பட்டிருந்ததுடன், களஞ்சிய முற்பண கணக்கிற்கு உரிய 2018 ஆம் ஆண்டு முதல் 2021 ஆம் ஆண்டு வரை செலுத்தப்பட்ட தாமதக் கட்டணம் மற்றும் வட்டிப் பெறுமதி ரூபா 73,921,280 ஆக காணப்பட்டது. | இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களுக்காக செலுத்தும் போது ஆவணங்களை சமர்ப்பித்தலின் தாமதத்தின் அடிப்படையில் வங்கியினால் அறவிடப்பட்ட வட்டி வருமானம் மற்றும் மீளாய்வாண்டின் போது இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களுக்காக மேற்கொள்ளப்பட்ட தாமதக் கட்டணம் மற்றும் திறைசேரியில் இருந்து கிடைக்கின்ற நிதி அளவின் பிரகாரம் திறைசேரி விடுவிப்பு மேற்கொள்கின்றமையினால் கிடைக்கின்ற கட்டுநிதி தாமதமாக கிடைக்கின்ற காரணமாக கப்பல் கூட்டுத்தாபனத்திற்கு தாமதக் கட்டணம் செலுத்துதல் தவிர்க்க முடியாத நிலைமையாக இருந்ததை சுட்டிக் காட்டுக்கின்றோம். | தாமதக் கட்டணம் மற்றும் வட்டி செலுத்துதல் கொடுப்பனவுகளுக்கு காரணங்களை கண்டறிந்து பொருட்களை இறக்குமதி செய்யும் பொறிமுறையொன்றை செயற்திறனாக்குதல் வேண்டும். |
| (எ) | காலி நிலையான வீதி பரிசோதனை அதிகார பிரதேசத்தில் சில இடங்களில் அமைக்கப்பட்டிருந்த 6000 நீள அடியான Rails அளவான இருப்பு புத்தகங்களில் குறிப்பிடப்படாதிருந்ததுடன், 2022 இன் ஆரம்ப மாதங்களின் போது மெய்மெய்யாய்வில் கண்டறியப்பட்ட இந்த உடைந்த (scrap) Rails அளவு முறையானதாக இருப்பு புத்தகங்களுக்கு எடுத்து அதனை தற்போது காணப்படுகின்ற சந்தை விலையின் கீழ் விற்பனை | இந்த சந்தர்ப்பத்தின் போது இதற்கு பதிலளிப்பதற்காக உரிய உபதிணைக்களத்தின் உறுதிப்படுத்தல்களை பெற்றுக்கொள்ளுதல் அவசியமாக இருந்தமையால் அதற்கான கால அளவு போதாதிருந்ததை தயவுடன் அறியத்தருகின்றோம். | அகற்றப்பட்ட Rails இருப்பு புத்தகங்களில் அறிக்கைகள் வைக்கப்பட வேண்டியிருந்ததுடன், அவற்றை முறையான பிரகாரம் விற்றுத் தீர்த்து வருமானத்தை உழைப்பதற்கு நிர்வாகம் கவனம் செலுத்துதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | செய்வதால் பெறக் கூடியதாக காணப்பட்ட ரூபா 13,440,000 பெறுமதி தொடர்பாக நிர்வாகத்தின் கவனம் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் செலுத்தப்பட்டிருக்கவில்லை . | | |
| (ஏ) | கண்டி நிலையான வீதி பரிசோதனை அதிகார பிரதேசத்தில் scrap Rails ஆக 45’ – 30’ நீளம் 15174’ அடி மற்றும் ஏனைய வகைகளில் நீள அடி 6285 ஆக நீள அடிகள் 21459’ காணப்பட்டதுடன், இதற்காக சந்தையில் காணப்படுகின்ற அதிக கேள்வியின் அடிப்படையில் எடுத்தால் ஒரு நீள அடி ரூபா 2,000 வீதம் (வற் மற்றும் ஏனைய வரியின்றி) விற்பனை செய்வதன் மூலம் பெறக் கூடியதாக இருந்த ரூபா 42,918,000 வருமானத்தை பெற்றுக் கொள்வது தொடர்பில் நிர்வாகம் கவனம் செலுத்தியிருக்கவில்லை. | இந்த சந்தர்ப்பத்தின் போது இதற்கு பதிலளிப்பதற்காக உரிய உபதிணைக்களத்தின் உறுதிப்படுத்தல்களை பெற்றுக்கொள்ளுதல் அவசியமாக இருந்தமையால் அதற்கான கால அளவு போதாதிருந்ததை தயவுடன் அறியத்தருகின்றோம். | வருமானத்தை உழைக்கக் கூடிய விடயங்களில் வருமானத்தை உழைப்பதற்கு நிர்வாகம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஐ) | காலி நிலையான வீதி பரிசோதனை அதிகார பிரதேசத்தில் ரூபா 27,831,650 பெறுமதியான பயன்படுத்துவதற்கு முடியாத உடைந்த பொருள் இருப்பொன்று காணப்பட்டதுடன், அந்த பொருட்களை விற்பனை செய்வதால் கிடைக்கக் கூடியதாக இருந்த வருமானம் தொடர்பாக நிர்வாகம் கவனம் செலுத்தியிருக்கவில்லை. | இந்த சந்தர்ப்பத்தின் போது இதற்கு பதிலளிப்பதற்காக உரிய உபதிணைக்களத்தின் உறுதிப்படுத்தல்களை பெற்றுக்கொள்ளுதல் அவசியமாக இருந்தமையால் அதற்கான கால அளவு போதாதிருந்ததை தயவுடன் அறியத்தருகின்றோம். | வருமானத்தை உழைக்கக் கூடிய விடயங்களில் வருமானத்தை உழைப்பதற்கு நிர்வாகம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஔ) | வெலிகம நிலையான வீதி பரிசோதனை அலுவலக வலவில் மீண்டும் பயன்படுத்த முடியாதிருந்த நீள அடி 605’ 6’’ Rails இருப்பொன்று பாதுகாப்பின்றி களஞ்சியப்படுத்தப்பட்டமை அவதானிக்கப்பட்டதுடன், இரும்புக்காக அதிக கேள்வி காணப்பட்ட நிலைமையில் காணப்படுகின்ற சந்தை விலையின் படி ரூபா 1,356,320 வருமானம் ஒன்றை திணைக்களத்திற்கு பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருந்த சந்தர்ப்பம் தொடர்பாக முகாமைத்துவம் கவனம் செலுத்தியிருக்கவில்லை. | இந்த சந்தர்ப்பத்தின் போது இதற்கு பதிலளிப்பதற்காக உரிய உபதிணைக்களத்தின் உறுதிப்படுத்தல்களை பெற்றுக்கொள்ளுதல் அவசியமாக இருந்தமையால் அதற்கான கால அளவு போதாதிருந்ததை தயவுடன் அறியத்தருகின்றோம். | வருமானத்தை உழைக்கக் கூடிய விடயங்களில் வருமானத்தை உழைப்பதற்கு நிர்வாகம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஓ) | 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளில் ஆரம்பிக்கப்பட்ட பயன்படுத்த முடியாத உடைந்த இரும்பு 3,113,080 கிலோ கிராம் கேள்வியின் மூலம் விற்பனை செய்யும் செயற்பாடுகளின் போது பின்வரும் குறைபாடுகள் ஏற்பட்டிருந்தன. | | |
| (i) | கேள்வி திறத்தல் குழு நியமிக்கப்படாமை. | பதிலளிக்கப்படவில்லை. | கேள்வி திறத்தல் குழு நியமிக்கப்படல் வேண்டும். |
| (ii) | தொழில்நுட்ப குழுவினால் இரண்டு அறிக்கைகள் 02 சந்தர்ப்பங்களில் வழங்குதல். | பதிலளிக்கப்படவில்லை. | அரசாங்கத்திற்கு நட்டம் ஏற்படாத வகையில் காலரீதியாக வெளிப்படையாக கேள்வி மூலம் விற்பனை செய்தல் மற்றும் |

| | | | |
|---|---|---|---|
| | | | அரசாங்கத்திற்கு நட்டம் ஏற்படாத வகையில் நடவடிக்கை எடுத்த சந்தர்ப்பங்கள் தொடர்பாக உத்தியோகத்தர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (iii) | தொழில்நுட்ப குழுவினால் ஆரம்ப அறிக்கைக்காக கவனத்தில் கொள்ளப்படாத நிறுவனம் இரண்டாவது சந்தர்ப்பத்தின் போது கவனத்தில் கொள்ளப்பட்டு அந்த நிறுவனத்திற்கு கேள்வி கையளித்தல் மற்றும் அதன் போது ஆகக் கூடிய விலைக்கு பதிலாக குறைந்த விலை பெற்றப்பட்டமை. | பதிலளிக்கப்படவில்லை. | -மேற்படி- |
| (iv) | கேள்வி குழு கேள்வி கையளித்தல் தீர்மானம் அமைச்சின் செயலாளரால் இரத்துச் செய்யப்பட்டு 02 வருடத்திற்கு பின்னர் அந்த நிறுவனத்திற்கு வழங்கியமை | பதிலளிக்கப்படவில்லை. | -மேற்படி- |
| (v) | கேள்வியை உரித்தாக்கிக் கொண்ட நிறுவனத்தால் அதிக விலையில் (ரூபா 60) இரும்பு கோரியிருக்கும் போது அது புகையிரத உத்தியோகத்தர்கள் நிராகரித்திருந்தன் காரணமாக ரூபா 31,898,426 தொகை இழக்கப்பட்டிருந்தது. | பதிலளிக்கப்படவில்லை. | -மேற்படி- |

| | | |
|---|---|---|
| (vi) இந்த நடவடிக்கைகளை தீர்த்து வைக்கும் செயற்பாடுகளுக்கு அனுப்பியதன் காரணமாக அரசாங்கத்திற்கு ரூபா 944,600 செலவினம் ஒன்று ஏற்பட்டிருந்தமை. | பதிலளிக்கப்படவில்லை. | -மேற்படி- |
| (vii) ஆரம்ப சந்தர்ப்பத்தின் போது ஆகக் குறைந்த விலையின் கீழாக இருந்த போதிலும், கேள்வி கையளிக்கப்பட்டிருக்குமாயின் அந்த தொகைக்காக தற்போது கிடைக்க வேண்டிய முதலீட்டு வட்டி ரூபா 44,917,048 அரசாங்கத்திற்கு இழக்கப்பட்டிருந்தமை. | பதிலளிக்கப்படவில்லை. | -மேற்படி- |

**4. நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைதல்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| 2030 இன் நிலைபேறான அபிவிருத்திகாக நிகழ்ச்சி நிரலில் குறிப்பிடப்பட்ட நோக்கங்களை அடைந்து கொள்வதற்கு புகையிரத திணைக்களத்தால் தமது விடயப் பரப்பின் பிரகாரம் நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் தயாரிக்கப்பட்டிருந்த போதிலும், அந்த செயல் முன்னேற்றத்தை அளவிடுவதற்கான இலக்குகள் இனங்காணப்பட்டிருக்கவில்லை. | பதிலளிக்கப்பட்டிருக்கவில்லை. | திணைக்களத்தின் விடயப் பரப்பிற்கு ஈடுகொடுக்கின்ற வகையில் நிலைபேறானா அபிவிருத்தி நோக்கங்கள் மற்றும் இலக்குகள் இனங்காண வேண்டியிருந்ததுடன், அதன் செயல் முன்னேற்றத்தை அளவிடும் குறிகாட்டிகள் அதற்கு இணங்க இனங்காணப்படல் வேண்டும். |

## 5. நல்லாளுகை

### 5.1 பொது மக்களுக்கு சேவைகளை நிறைவேற்றுதல்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
| --- | --- | --- |
| புகையிரத திணைக்களத்தின் புகையிரத வீதி முறைமையில் காணப்படுகின்ற பிரச்சினைகள் மற்றும் காணப்படுகின்ற ஏனைய நலிவுகளின் காரணமாக 2022 ஆம் ஆண்டின் போது மாத்திரம் 117 புகையிரத தடம் புரழ்வுகள் அறிக்கையிடப்பட்டிருந்தன. இதன் காரணமாக புகையிரத வீதிக்கும் ஏற்பட்ட நட்டம் மற்றும் அதனை நல்ல நிலைக்கு கொண்டுவருவதற்கு செலவான கிரயம் திணைக்களத்தால் உரிய பிரகாரம் தீர்மானிக்கப்படாதிருந்ததுடன், அதற்கு பொறுப்பு வாய்ந்த தரப்பினரை இனங்காண்பதற்கும் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பதிலளிக்கப்பட்டிருக்கவில்லை. | பொறுப்பு வாய்ந்த தரப்பினரரை இன்ங்கண்டு நிதிப் பிரமானத்தின் பிரகாரம் மற்றும் ஒழுக்காற்று நடைமுறையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 6. மனிதவள முகாமைத்துவம்

### 6.1 அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர், உள்ளபடியான பதவியணியினர்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
| --- | --- | --- |
| திணைக்களத்தால் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்ட பதவியணியினரின் தரவுகளின் பிரகாரம் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஒட்டுமொத்த அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரின் வெற்றிடங்களின் எண்ணிக்கை 8821 ஆகும். அது அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கையில் 43 சதவீத அளவாகும். | ஏற்றுக் கொள்கின்றோம். ஆரம்ப நிலையில் அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கை 4043 ஆகும். தற்போது வெற்றிடங்கள் இல்லை. | கூடிய விரைவில் பதவியணியினர் வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 6.2 மனிதவள அபிவிருத்தி திட்டம்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| 2018 சனவரி 24 ஆம் திகதிய அரச நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 2/2018 இன் பிரகாரம் அரசாங்க நிறுவனத்தில் மனித வள அபிவிருத்தி சுற்றறிக்கையின் மூலம் இலங்கையில் அரச சேவையில் கேந்திர மயப்படுத்தப்பட்ட மனித வளத்தை நாட்டின் அபிவிருத்தியின் நோக்காகக்கொண்டு மிகவும் செயற்திறனாவும் வினைத்திறனாகவும் செயற்படுத்தும் வகையில் அரச துறைகளுக்கு சொந்தமான மனித வள திட்டங்களை ஈடுபடுத்தும் தேவை தொடர்பான வழிகாட்டி வழங்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் மேற்கூறப்பட்ட நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்ட இணைப்பு 02 படிவத்தை அடிப்படையாகக் கொண்டு மனித வள அபிவிருத்தி திட்டமொன்று தயாரிக்கப்படாதிருந்ததுடன், சுற்றறிக்கையின் இணைப்பு 01 படிவத்தை அடிப்படையாகக் கொண்டு 2018 ஆம் ஆண்டு முதல் மேற்கொள்ள வேண்டிய ஒட்டுமொத்த பதவியணியினருக்கான வருடாந்த செயலாற்றல் உடன்படிக்கையும் கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை. | மனித வள அபிவிருத்தி திட்டம் தயாரிக்கப்படுகின்றது. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |